www.tamilarangam.net
தந்துதவியவர்: தேசம்நெற்


# தமிழோசை

THAMIZHOSAI

உள்ளே...

* மாறுபட்ட...
* அம்மா
* புகைப்படக்கலைஞர்
* அவ்வப்போது..
* சொல்லாரம்
* லண்டன் நிகழ்வுகள்

ஓசை : 1
ஒலி : 11

ஆங்கிரஸ ஹூ ஐப்பசி மீ 28ந் திகதி (13-11-1992) 253 Western Avenue London W3 0PP Tel: 44-(0)81-993 7652 Fax: 44-(0)81-993 8611


**தமிழோசை இவ்விதழ் முதல் வாரப்பத்திரிகையாக, வெள்ளிக்கிழமை தோறும் வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்**

### கர்நாடக முதல்வர்

# பங்காரப்பா ராஜினாமா



(சென்னை நிருபர்)

கர்நாடக முதல்வர் பதவியில் இருந்து எஸ் பங்கரப்பா ராஜிநாமா செய்தார். கட்சித் தலைமையில் இருந்து வந்த உத்தரவை ஏற்று, கடந்த புதன் அன்று இரவு மாநில ஆளுநர் குர்ஷத் ஆலம் கானை, ஆளுநர் இல்லத்தில் சந்தித்து தனது ராஜிநாமா கடிதத்தை கையளித்தார்.

மாற்று ஏற்பாடு செய்யும் வரை பதவியில் இருக்கும்படி ஆளுநர் அவரை கேட்டுக் கொண்டார். கர்நாடகத்தில் ஏறக்குறைய ஒரு வருடமாக இருந்துவரும் அரசியல் குழப்ப நிலை இத்துடன் முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆளுநர் இல்லத்தில் நிருபர்களிடம் பேசும்போது முதல்வர் பதவிக்கு அடுத்ததாக யார் நியமிக்கப்பட்டாலும், தன்னுடைய ஒத்துழைப்பு எப்போதும் உண்டு என்றும், கட்சி மேலிடம் விரும்பினால், அடுத்த முதல்வரைத் தெரியும் பணியிலும் உதவிபுரியத் தயாராக இருக்கிறேன் என்றும் கூறினார்.

பதவியில் இருந்து விலகமாட்டேன் என்று முன்னர் கூறியதைப்பற்றி நிருபர் கேட்டபோது, ஏழைக்களுக்காக பல நல்ல திட்டங்களை அமுல்படுத்தி வந்தேன். திடீரென்று விலகிவிட்டால் இவை பாதிக்கப்படுமே என்பதற்காகவே கவலைப்பட்டேன். எனினும் கட்சித் தலைமை வேறு விதமாக

(3ம் பக்கம் பார்க்க)

# மருந்தின்றி அவதியுறும் யாழ் மக்கள்

(கொழும்பு நிருபர்)

நடைபெற்றுவரும் மும்முனை இராணுவ நடிவடிக்கைகளின் மத்தியில், ஏராளமான பொது மக்கள் பாதிப்புக்கு இலக்காகி வருகின்றனர். காயங்களிற்குள்ளாகும், ஆயிரக் கணக்கானோர், மருத்துவ மனைகளில் நிறைக்கப்பட்டு வருகின்றனர்.

சிகிச்சைகளிற்கு மருந்தின்றி வெறும் கட்டிடங்களாக காட்சி தரும், யாழ்ப்பாண மருத்துவமனைகளில், ஏற்கனவே, தொற்று நோய்களுக்கு ஆளாகி சிறுவர் முதல் முதியோர் வரையிலான பல்லாயிரக் கணக்கானோர், தகுந்த சிகிச்சை பெற வசதியின்றி படும் அவலங்கள், தற்போதைய நிலையில், மேலும் பரிதாபகரமாகியுள்ளன. மருத்துவ மனைகளில் தங்க இடமில்லாது, காயப்பட்ட, நோய்வாய்ப்பட்ட நிலையிலும் பலர் தமது வீடுகளிலேயே, "வருவது- வரட்டும்' என தங்கியிருக்கின்றனர். இவர்களில், சிறுவர், குழந்தைகளின் நிலை மிகவும் பாரதூரமானது. இவ்வகையிலான இறப்பு வீதங்கள், முன்னெப்போதுமில்லாதவாறு இப்போ உச்ச நிலையடைந்து வருகின்றன.

யாழ்- வல்வெட்டித்துறை இந்திராணி மருத்துவமனையில், வயிற்றோட்ட நோய் பீடிக்கப்பட்ட பல சிறுவர்கள் அண்மையில் இறந்துள்ளனர். புள்ளி விபரங்களின்படி, யாழ் மாவட்டத்தில், கடந்த ஆடி, ஆவணி, புரட்டாதி ஆகிய 3 மாதங்களில் 3 ஆயிரத்து 667 பேர் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 311 பேர் மூளைக் காய்ச்சலை உருவாக்கக் கூடிய மலேரியா நோயிற்கும் ஆளாக்கப்பட்டுள்ளனர் என தெரிய வருகின்றது.

தொடரும் யுத்த சூழ்நிலையில், இன்னும் பற்பல நோய்க் காரணிகளின் தாக்கத்தில், மேலும் பலர் இனம் தெரியாத நோய்களிற்கும் அதைவிட மனநோய்களிற்கும் ஆட்பட்டுள்ளனர். இவற்றோடு, இன்று நடைபெறும், கட்டுமாணமற்ற கடல், ஆகாய இராணுவ நடவடிக்கைகள் நிலைமையை படுமோசமாக்கி வருகின்றது.

இந்த நிலை தொடர்பாக பல தொண்டர் ஸ்தாபனங்கள், பொது அமைப்புகள், அரசியல் கட்சிகள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் விடுத்த வேண்டுகோள்களைஅடுத்து, அமுலில் இருக்கும் மருந்து தட்டுப்பாட்டை சிறிதளவு தளர்த்தி குறைந்தளவு, உயிர்காக்கும் மருந்து வகைகள், செலுத்திகள் என்பவற்றை யாழ்ப்பாணம் அனுப்ப, இலங்கை கூட்டுப்படைத் தலைமையகம் கடந்த ஞாயிறன்று அனுமதி வழங்கியது.

பத்தில் ஒரு மடங்காகக் கூட அளவிடமுடியாத இவ்வனுமதி, இன்றிருக்கும் அவலச் சூழலில், அநியாய உயிரிழப்புகளை ஓரளவாவது தடுக்குமானால் நன்மையே.மனித நேயம் பற்றி அதிக ஆர்வம் கொள்ளும் உலக நாடுகளும் அங்கு ஆட்சியிலுள்ளோரும் நம்மவரும் அக்கறை கொள்வார்களா?

# "ஜெய ஹத்தி" இராணுவ நகர்வுகள்

(நமது கொழும்பு நிருபர்)

ஞாயிறு அதிகாலை மட்டக்களப்பு மாவட்ட மேற்கு பகுதிகளில், பிறப்பிக்கப்பட்ட முழு நேர ஊரடங்கு உத்தரவின் கீழ், சுமார் 2 ஆயிரம் அரசபடைகள் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டன.

காடுகளை மருவிய கிராமங்களை, உள்ளடக்கிய இப்பகுதிகளில் அண்மைய காலங்களில் விடுதலைப் புலிகளின் நடமாட்டங்கள் அதிகரிக்க ஆரம்பித்ததை அடுத்து, முடுக்கி விடப்பட்ட இந்நடவடிக்கைக்கு "ஜெய ஹத்தி" (வெற்றியை நோக்கி) என்ற குறியீட்டுப் பெயர் சூட்டப்பட்டிருந்தது.

ஞாயிறு காலை ஊரடங்கு அறிவிக்கப்பட்ட அதே சமயம் பொம்பர் விமானங்களும், ஹெலிகொப்டர்களும், காட்டுப்பகுதிகள் மீது தொடர்ச்சியான குண்டு வீச்சுக்களை மேற்கொண்டன. பரவலாக சில மணி நேரம் தொடர்ந்த இத்தாக்குதல்களை அடுத்து, இரு பிரிவுகளாக தரைமார்க்க நகர்வுகளை ஆரம்பித்த படைகள், தேடுதல்களை தீவிரப் படுத்தின.

தாக்குதல்களிற்கு ஈடுகொடுக்க முடியாது, விடுதலைப்புலிகள் காடுகளிற்குள் பின் வாங்கிவிட்டதாக அரசு கூறுகின்றபோதும், அப்பகுதி படுவான்கரை கிராமத்தில் கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. சேதங்கள் அறியப்படவில்லை. 3 நாள் தொடர்ந்த இவ் இராணுவ நகர்வுகள், செவ்வாய் இரவு ஊரடங்கு தளர்த்தலுடன் முடிவிற்கு கொண்டு வரப்பட்டன.

### ஹெலிகொப்டர் விழுந்து நொருங்கியது

மட்டக்களப்பு "ஜெய ஹத்தி" இராணுவ நகர்வில் ஆகாயத் தாக்குதலில், ஈடுபட்டு விட்டு திரும்பிக் கொண்டிருந்த விமானப்படை ஹெலிகொப்டர் ஒன்று செவ்வாயன்று விழுந்து நொருங்கியது.

அம்பாறை மாவட்ட உஹனை பகுதிக்கு அருகே 27ம் குடியிருப்பில் மாலை 4.30 மணியளவில் விழுந்து நொருங்கிய இவ்ஹெலிகொப்டரின் விமான ஓட்டி கொல்லப்பட்டதுடன், அதில் இருந்த இரு விமானப்படை அதிகாரிகள் படுகாயமடைந்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலில் பழுதடைந்த நிலையில், அவசரமாக தரையிறக்க முற்படுகையில், இயந்திர கோளாறு ஏற்பட்டு- விழுந்து நொருங்கியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன.

### 19 விவசாயிகள் பலி?

"ஜெய ஹத்தி" நகர்வில், விடுதலைப்புலிகளின் 3 முகாம்கள் தகர்க்கப்பட்டு, 19 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும், 60 பேர் விசாரணைக்காக கொண்டு செல்லப் பட்டுள்ளதாகவும், இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவங்கள் பற்றி, கிடைக்கப் பெறும் தகவல்களின் படி, நெல்லிக் காடு, சோரையன் கட்டு, தாமந்தி ஆறு, குறுந்தைய சோலை போன்ற விவசாயக் கிராமங்களில், அரச படைகள் கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன. அங்கிருந்த 25ற்கு மேற்பட்ட தனியார் வயல் பரப்புக்கள் தீயிட்டு சாம்பராக்கப்பட்டதோடு- கால் நடைகள் பலவும் கொல்லப் பட்டுள்ளன.

தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்ட போது, பாதுகாப்பு தேடி பாடசாலைகள், பொது இடங்களில் தஞ்சமடைந்திருந்த 1000ற்கு மேற்பட்ட பொதுமக்களில், 60ற்கு மேற்பட்ட இளைஞர்களை பளுகாமம் இராணுவ முகாமிற்கு படையினர் கொண்டு சென்றுமுள்ளனர்.

கிராமங்களிற்குள் புகுந்து அரச படைகள் புரிந்த மேற்படி நடவடிக்கைகளின் மத்தியில், அறிவிக்கப்பட்டிருக்கும், 19 உயிரிழப்புகள், விடுதலைப் புலிகளினதா? விவசாயிகளினதா? என்பது இச்செய்தி அச்சாகும் வரை தெளிவாகவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செய்திச் சரம்

5.11.92

## மார்கழியில் முடிவு

பாதுகாப்பு படைகளின் புலிகள் ஒழிப்பு நடவடிக்கைகள் இடை நிறுத்தப்படவில்லையென்றும், தேடுதல், தாக்குதல் நடவடிக்கைகள் தொடர்வதாகவும் விளைவுகளை அடுத்தமாத இறுதியில் எதிர் பார்க்கலாமெனவும், இராணுவ பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்.

## பலாலியில் மோதல்

யாழ் பலாலி முகாமருகே நகர முயன்ற விடுதலைப் புலிகள் மீது, விமான உதவியுடன் படைகள் நடாத்திய தாக்குதலில் 3 பேர் கொல்லப்பட்டு பாதுகாப்பரணும் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

## உருக்குலைந்த எலும்புக் கூடுகள்

அம்பாறை மாவட்ட சம்மாந் துறை,சவளக்கடை பகுதியில் இடம் பெயர்ந்த தமிழ் மக்களின் வீடுகள் சிலவற்றில் உருக்குலைந்த மனித எலும்புக்கூடுகள் இருக்கக் காணப் பட்டுள்ளன.

6.11.92

## 'மீனவர்' வழக்கு வாபஸ்

ஐப்பசி 29ல், இந்திய கடல் எல்லையினுள் வைத்து இந்திய கடலோர காவற்படைகளால், கைது செய்யப்பட்ட 26 இலங்கை மீனவர்கள் மீது இந்திய அரசு தாக்கல் செய்திருந்த அத்துமீறல் வழக்கு, இலங்கை அரசின் வேண்டுகோளின் பேரில், வாபஸ் பெறப்பட்டதுடன், மீனவர்களும் விடுதலை செய்யப் பட்டனர்.

## அரசு எண்ணம் தெளிவாகிறது

இவ்வருட இறுதிக்குள் வட-கிழக்கு யுத்தம் முடியும் என கூறி வரும் பிரதமர் அடுத்த வருட வட-கிழக்கு யுத்தத்திற்கு இரட்டிப்பு பணம் ஒதுக்கியிருப்பது இனப்பிரச்னைக்கு இராணுவத்தீர்வில் அரசின் நாட்டத்தை தெளிவாக்குகிறது என தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா குற்றம் சாட்டியுள்ளார்.

## கப்பல் இடைநிறுத்தம்

யாழ் குடாநாட்டிற்கு உணவுப் பொருட்களை ஏற்றிச் செல்லும் குமண, குமாரி என்ற இரு கப்பல்களில் அரசின் செலவில் இயங்கும் 'குமாரி'யின் சேவை இடை நிறுத்தப்பட்டுள்ளது.

7.11.92

## கண்ணீர்ப்புகை பிரயோகம்

இலங்கையில் சுதந்திர வர்த்தக வலைய தொழிற்சாலைகளில் இருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்தும்படி கோரியும், தொழிலாளர்களின் உரிமைகளை வலியுறுத்தியும், நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார தலைமையில் கட்டுநாயக்காவில் நடைபெற்ற தொழிலாளர்களின் ஊர்வலம், பொலீசாரினால் கண்ணீர்ப்புகை பிரயோகம் செய்து குழப்பப்பட்டுள்ளது.

## 10 வருட கடுங்காவல்

வெளிநாடு ஒன்றில் இருந்து சட்ட விரோதமாக கொண்டு செல்லப்பட்ட ஆயுதங்கள், வெடி மருந்துகளை தென்னிலங்கை ஏக்கலை என்ற இடத்தில் மறைத்து வைத்திருந்தபோது, கைது செய்யப் பட்ட சுவிஸ்சர்லாந்து வாசிக்கு கொழும்பு நீதிமன்றம் 10 வருட கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்தது.

## படைகள் தலைமறைவு

கடந்த ஆவணி முதல் ஐப்பசி வரை இரு மாத காலத்துள் 1248 இராணுவத்தினர் முன்னறிவித்தல் இல்லாது விலகியுள்ளனர் என்றும், 4000 பேர் காணாமல் போயுள்ளனர் என்றும் இலங்கை பாதுகாப் பமைச்சகம் தெரிவித்துள்ளது.

7.11.92

## யாழ்-திருமலை கப்பல் சேவை

திருகோணமலை-யாழ்ப்பாணம் இடையே புதிய பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அறிவித்துள்ளார். ஒவ்வோர் தடவையும் 100 பயணிகள் குறிப்பிட்டளவு உடமைகளுடன் பயணம் செய்ய ஏதுவாக திட்டமிடப்படும் இக்கப்பல் சேவை ஆரம்பிக்கப் பட்டதும் வவுனியா ஊடான யாழ்ப் பாணத்திற்கான பயணிகள் போக்கு வரத்தை தடைப்படுத்த அரசு முனையலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

8.11.92

## காடுகளில் தேடுதல்

மட்டக்களப்பு மாவட்ட மேற்குப் பிரதேசங்கள் மீது காலவரையறையற்ற ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு, முற்றுகை நடவடிக்கைகள் ஆரம் பிக்கப்பட்டன. இப்பகுதி 'படுவான் கரை' கிராமத்தில் விடுதலைப் புலிகள் அரசபடைகளிடையே கடும் மோதல் இடம்பெற்றுள்ளன. சூழவுள்ள காட்டுப் பகுதிகள் மீது, விமானங்கள் குண்டு வீசி தாக்கி, வருகின்றன.

இக்காடுகளில் உள்ள விடுதலைப் புலிகள் முகாம்களில் இருந்து புலிகளை வெளியேற்றி, சூழவிருந்து தாக்குதல் நடாத்துவதே இந்நடவடிக்கையின் நோக்கம் என கூறப் படுகிறது.

## காணாமல் போனோர் விபரம்

கடந்த வாரம் மட்டக்ககளப்பிற்கு விஜயம் செய்த சர்வதேச மன்னிப்பு சபை பிரதிநிதிகள் பாதிப்புற்ற பகுதிகளுக்கு நேரில் சென்று 152 பொது மக்களின் சாட்சியங்களை பதிவு செய்ததோடு, மட்டு. அரச அதிபரிடம் இருந்து காணாமல் போனோர் 4189 பேரின் பெயர் முகவரிகளையும் சேகரித்து திரும் பியுள்ளனர்.

## கடலில் 7 பேர் பலி

வவுனியாவில் இருந்து யாழ் செல்ல ஆலம்கேணியில் இருந்து கிளாலி கடல் ஏரியூடாக பயணம் செய்த பொது மக்கள் படகு அரச படைகளால் தாக்கப்பட்டு 7 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

9.11.92

## 'பொலீஸ்' கட்டாய சேவை

வட-கிழக்கில் பணியாற்ற பொலீஸ் துறையினர் தயக்கம் காட்டி வருவதைத் தொடர்ந்து கட்டாய சேவையை அரசு அறி வித்தது.

வட-கிழக்கிற்கு இடமாற்றப்படும் பொலீசார் அங்கு குறைந்தது 6 மாதங்கள் பணியாற்ற வேண்டும் என்றும், மீறுவோர் தாமாக பதவி இழந்தவர்களாக கணிக்கப்படுவர் என்றும் வலியுறுத்தியுள்ளது.

10.11.92

## கொப்பேகடுவ உருவச்சிலை

யாழ் ஊர்காவற்துறையில், தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் ஞாபகார்த்த உருவச்சிலை வவுனியாவில் அவரது மனைவியால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

10.11.92

## சோற்றுக்குள் மனித விரல்

கொழும்பு- மாளிகாவத்தையில், ஹோட்டல் ஒன்றில் பெறப்பட்ட சோற்றுப் பார்சல் ஒன்றினுள், மனித கை- விரல் துண்டு ஒன்று இருக்கக் காணப்பட்டு புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அவ் ஹோட்டல் சீல் வைக்கப்பட்டதுடன், அங்கு வேலை செய்த 8பேர் விசாரணைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

## முஸ்லீம்கள் மீது தாக்குதல்

மட்டக்களப்பு- வந்தாறுமூலையில் இருந்து செங்கலடி நோக்கி சென்ற பஸ் வண்டி ஒன்றில் இருந்த 4 முஸ்லீம்கள், இளைஞர் குழு ஒன்றினால் கைக்குண்டு வீசி தாக்கப்பட்டுள்ளனர்.


தமிழோசை

சந்தா படிவம்

தமிழோசை பத்திரிகையை அஞ்சலில் பெற கீழ்க்காணும் விண்ணப்பப் பத்திரத்தை பூர்த்தி செய்து அதற்கான பணத்தையும் காசோலையாகவோ அல்லது தபால் கட்டளையாகவோ அனுப்பி வைக்கவும்.

(Please mark Cheques or Postal Orders Payable to "THAMIZHOSAI")

Name: ____________________

Address: ____________________

____________________

____________________

____________________

Postcode: ____________________

| | UK/Europe | Other Countrys |
|---|---|---|
| 12 Issues | £ 7.00 | Us $ 20.00 |
| 24 Issues | £ 12.00 | Us $ 40.00 |

PLEASE SEND THIS FORM TO

THAMIZHOSAI
253, WESTERN AVENUE
LONDON W3 0PP
UNITED KINGDOM



கோலாகலத் திறப்பு விழா

நாவூற வைக்கும் இலங்கை, தென்னிந்திய உணவு வகைகள்

தெரிவு செய்ய விதவிதமான ருசிமிகு உணவு




UNDER NEW MANAGEMENT
J.R.GROUP

FULLY LICENSED RESTAURANT AND TAKE-AWAY
168, UPPER TOOTING ROAD, TOOTING BROADWAY, LONDON SW17 7ER
TEL:081-682 3363


OPENING HOURS: MONDAY - 6.00 PM TO MIDNIGHT
TUESDAY TO FRIDAY 12.00 NOON TO 3.00 PM & 6.00 PM TO MIDNIGHT
SATURDAY & SUNDAY 12.00 NOON TO MIDNIGHT

திறப்பு விழாவை முன்னிட்டு வெள்ளி, சனி, ஞாயிறு நாட்களில் இலவச WINE பரிமாறப்படும்


## 180ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்.

மண்ணுலகில்: 10.06.1970

விண்ணுலகில்: 10.05.1992



### பரஞ்சோதி மகேந்திரவரதன்

(வட்டக்கச்சி கிளிநொச்சி, இலங்கை)

மகேந்திர வரதா! நீ மாயமாய் மறைந்தனையோ;
மலைபோல வந்தவனா? அம் மாயக் கூற்றுவனும்.
எமை விட்டுச் சென்றனையோ? எங்கென்று சொல்லாமல்.
பாசத்தின் உறைவிடமே, பண்பு, நிறை பேருருவே,
மாசற்ற மனமுடையோய் மறைந்ததேன் மாமணியே,
சிரித்த உன் முகம் காண சிந்தை துடிக்குதடா,
சரித்திரத்து நாயகனே, தர்மமதைக் காத்தவனே;
எங்குதான் சென்றனையோ; எமை ஏங்கித் தவிக்கவிட்டு
மனங்களிலே உந்தன் மந்திரப் புன்னகை
ஆறு திங்கள் சென்றாலும் மறையாது உன் நினைவு,
பல ஆண்டு சென்றிடினும் மாறாது உன்பாசம்.
இறப்பினும் இறைவனில் நீர் இணைந்திட,
இறைவனை இறைஞ்சுகிறோம் மகேந்திரா:

மகேந்திர வரதனின் இறுதிச் சடங்குகளில் கலந்து நேரில் அஞ்சலி செலுத்தியவர்கள், தொலைபேசி, தொலைச்செய்தி மூலம் எமது துயரில் பங்கு கொண்டவர்கள் யாவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

பெற்றோர், சகோதரர், உற்றார்,உறவினர், நண்பர்கள்.

தகவல்:- ப.கலியுகவரதன்
சுவிஸ். T.P 081 815679



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அயோத்தி மீண்டும் போர்க்களம்

## 10 லட்சம் பக்தர்கள் படையெடுப்பர்

(சென்னை நிருபர்)

அயோத்தியில் சர்ச்சைக்குரிய பகுதியில் இராமர் கோயில் கட்டும் பணியை, மார்கழி 6ம் தேதி தன்னிச்சையாக ஆரம்பிக்க பாரதீய ஜனதா மற்றும், விஸ்வ இந்து



பரிஷத் ஆகியன முடிவு செய்துள்ளன.

இத்தினத்திற்கு இரு தினங்களிற்கு முன்னர் 10 ஆயிரம் இந்து சாமியார்கள் சன்னியாசிகள் உட்பட 10 லட்சம் பக்தர்கள்,அயோத்திக்கு படையெடுத்து செல்லும் ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

மீண்டுமொரு அரசியல் சர்ச்சையை கிளப்பி விட காலாகவிருக்கும், இந்துக்களின் இந்நடவடிக்கையை- தடுத்து நிறுத்த அகில இந்திய பாபர் மசூதி திட்டங்களை தீட்டி வருகிறது. இவ்வாரம் கூடவிருக்கும் இதன் செயற்குழு, இந்துக்களின் படையெடுப்பை முறியடிக்க சம அளவு இஸ்லாம் பக்தர்களை திரட்டும் முயற்சியில் இறங்கியுள்ளதாக அறியப்படுகிறது.

பாபர் மசூதி செயற்குழுத் தலைவர் சுல்தான் சலாவுதீன் விடுத்திருக்கும் பகிரங்க அறிக்கையில்; பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே- விஸ்வ இந்து பரிஷத் இம்முடிவை தன்னிச்சையாக மேற்கொண்டுள்ளது. பேச்சுமூலம் இனி தீர்வு ஏற்படப் போவதில்லை. மசூதியை பாதுகாக்கும் பொறுப்பு மத்திய அரசினுடையது. மசூதியை அழிக்கப்பட்டால் நாட்டில் மதக் கலவரம் மூளும் என எச்சரித்துள்ளார்.

இதற்கிடையில் பாபர் மசூதியினரின் எச்சரிக்கைக்கு சவால் விடுப்பது போன்று, பாரதீய ஜனதா கட்சி தலைவர் அத்வானி கூறுகையில், நடைபெறப் போகும் நிகழ்வுகளை கட்டுப்படுத்துவதாயின், மத்திய அரசு உடனடியாக இராம ஜென்மபூமி குழுத்தலைவர்களுடன் நேரடி பேச்சு நடாத்த வேண்டும் என அறிவித்துள்ளார்.

# இலங்கையில் வரம்பு மீறும் யுத்த தர்மம்

இலங்கையின் வட-கிழக்கு தமிழ்ப் பிரதேசங்களில், அண்மைய வருடங்களாக கட்டுமாணமற்று நடாத்தப்படும், விமானத்தாக்குதல்கள் யுத்த விதிகளுக்கு அப்பாற்பட்டு, பெரும் அனர்த்தங்களை விளைவித்து வருகின்றன.

இந்தியப் படைகள் இலங்கையில் நிலை கொண்டிருந்த காலம் வரை, இலங்கை அரசின் அத்துமீறல்களை, இந்திய அரசு சர்வதேசம் அறிய க்ண்டித்து, கட்டுப்படுத்தி வந்தது. அதன் பிற்பகுதிகளில் கண்டும் காணாத நிலைப்பாட்டினை கடைப்பிடிக்க ஆரம்பத்திலிருந்து,இலங்கை அரசின் நடவடிக்கைகள் வரம்புமீறி கேட்பாரற்று தொடர்கிறது.

விமானங்களின் உதவியுடன், இராணுவ முற்றுகைகள் நடைபெறும் இடங்களில், தம்முயிர்காக்க பொதுமக்கள் ஆலயங்கள் வணக்கஸ் தலங்களை நாடி தஞ்சம் புகும் நிலைமாறி தற்போது ஆலயங்களை தவிர்த்து வேறிடங்களுக்கு ஓடும் அளவிற்கு, அரசின் யுத்த தர்மம் ஓங்கியுள்ளது.

இந்தியப் படைகளின் வெளியேற்றத்தின் பின்னர், 90ம் ஆண்டிலிருந்து மீண்டும் உக்கிரமடைந்த யுத்த நடவடிக்கைகளில் வடக்கு-கிழக்கில், முல்லைத்தீவு, மன்னார் தவிர்ந்த ஏனைய 6 மாவட்டங்களில் 796 வணக்க ஸ்தலங்களை தாக்கி சேதப்படுத்தப்பட்டுள்ளதாக அண்மைய புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

பொதுமக்கள் தஞ்சடைந்திருக்கும் இது போன்ற பொது இடங்களை, தாக்கும் நிலைகளாக போராளிகள் பயன்படுத்துவதும், பலமடையும் எதிர்த்தாக்குதல்களை திசை திருப்ப- இவ்விடங்களை அரச படைகள் குறியாக்குவதும்- இங்கு காரணங்களாகின்றன. பெளத்த மதவாத அதிகார வழி நடத்தல்களுக்கும் மறைமுக காரணங்களாக ஊக்கம் பெறுவதும் அவதானிக்கத்தக்கது.

தற்போது யாழ் குடாநாட்டில், தொடர்ச்சி பெறும், விமானத் தாக்குதல்களின் நெருக்கத்தில், அகதிகள் தொகை பெருமளவில் அதிகரித்தும் வருகின்றன. முன்னைய அனுபவங்களின் அடிப்படையில், பாதுகாப்பான மத்திய பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து தனியார் வீடுகள், தரிசு நிலங்களில் இவர்கள் தஞ்சமடைந்து வருகின்றனர்.

கண்மூடித்தனமான விமானத்தாக்குதல்கள் எந்நேரத்திலும் எவ்விடத்தையும் குறிபார்க்கலாம் என்ற அச்சத்தில், கிராமங்களை விட்டு வேறிடங்களுக்கு இடம்பெயரும் அகதிகள், தரிசு நிலங்களில், தற்காலிக குடில்கள் அமைத்து தஞ்சமடைகின்றனர். குடும்பங்களாக உடமைகளுடன் இவ்வகையில் அகதியுறும் அகதிகளுக்கு, குடில்கள் அமைத்து தங்க, அங்குள்ள சமூக சேவை நிறுவனங்கள் பெரிதும் உதவி வருகின்றன

# இனவெறியரின் அச்சுறுத்தல்

(லண்டன்)

கடந்த 7ஆம் தேதி கிறீன்விச்சில் (GACARA) என்ற அமைப்பினால் (இனவாதத்திற்கெதிரான கிறினிச் நடவடிக்கைக்குழு) ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில், 1000 பேர் கலந்து கொண்டனர். அப்போது, சுமார் 200பேர் அடங்கிய இனவெறியர் கூட்டம் இவர்களைத் தாக்குமுகமாக அச்சுறுத்தல் நடவடிக்கையில் இறங்கினர்.

கடந்த ஆகஸ்ட் மாதம் 10ஆம் தேதி தென்கிழக்கு லண்டனில் எல்த்தம் எனுமிடத்தில் 16 வயது நிரம்பிய ரோகித் டுகல் என்ற இளைஞர், ஒரு இன வெறிக் கும்பலால் தாக்குண்டு கொலை செய்யப்பட்டதைக் கண்டிக்குமுகமாகவே, மேற்படி ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இவ்வகையான இனவெறிக் கொலைகள் அங்குமிங்குமாக தற்போது அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# பங்காரப்பா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நினைத்தது. அவர்களுக்கு என்னைவிட திறமையான ஒருவர் முதல்வராக கிடைக்கலாம்; நன்றாக செயல்படக் கூடியவன் நான் தான் என்று நினைப்பது தவறு என்றும் பதில ளித்தார்.

59 வயதான எஸ்.பங்கரப்பா இரண்டு வருடங்களுக்கு முன்பு கர்நாடகாவின் முதல்வர் பதவி சிம்மாசனம் ஏறினார். தன்னை தெரிவு செய்த மக்களுக்கு என்ன பிரச்னை என்றாலும், அவை பற்றி ஆவன செய்யாமல் தமது புகழைக் காப்பதிலும், உடல்கட்டாக வைத்திருப்பதில் மிக்க கவனம் செலுத்தினார்.

பங்கரப்பா கர்நாடகத்தின் முதல்வராகுவதற்கு முன்பு, அப்பதவியை அடைவதற்கு கணக்குப் போட்டு செயல்பட்டார். இவரது மூத்த மகள் சுஜாதா, கர்நாடகாவில் வெளிவரும் இரண்டு ஆங்கிலப் பத்திரிகைகள் வெளியிடும் திலக் குமாரையும், இரண்டாவது மகள், கர்நாடகாவின் முன்னைய நடிகர் ராஜ்குமாரின் மகனாகிய சிவாவையும் மணம் முடித்தனர். ராஜ்குமார் பங்கரப்பாவின் ஆதரவு குறைந்திருந்த நேரத்தில், அரசியலில் பிரவேசம் செய்யக்கூட சிந்தித்தார். மூன்றாவது மகள் அனீதா, முன்னாள் இந்திரா காங்கிரஸ் எம்.பியும் கர்நாடகாவின் இன்றைய மிகப் பெரிய சாராய முதலாளியுமான, பாசவ ராஜ் இன் பேரனான பாவன் குமாரை மணமுடித்தார்.

மூத்தமகன் வசந்தகுமார் (மக்கள் இவரை குமார் பங்கரப்பா என்றழைப்பார்கள்) இவரது இந்த ஒரு பெரிய சூப்பர் ஸ்ரார், அடுத்த மகன் மதுவும் சினிமா உலகிலேயே. இத்தனை பக்கபலம் இவரது விரோதிகளை சற்று பின்வாங்க வைத்தது.

கடந்த ஆகஸ்ட் மாதம், அவரது பதவி இறக்கம், நிழலாக தொடர்ந்து வந்தபோது, சமயப் பற்றில்லாத இவர் பிரதமர் நரசிம்ம ராவையும், ஜனாதிபதி சர்மாவையும், புட்ட பர்த்திக்குச் சென்று சாயிபாவை சந்திக்க முயற்சித்தார். பிரதமர் ராவும் ஜனாதிபதி சர்மாவும் சாயி பாபாவின் தீவிர பக்தர்கள்.

தமிழ் நாட்டுக்கும் கர்நாடகத்திற்குமிடையிலான காவேரி நீர் பிரச்னையின் போது, சரிகின்ற மக்கள் ஆதரவைக் காப்பாற்ற நினைத்தார் இவர். பின்னர் கர்நாடக மாநில குண்டர்கள் அழுங்குப்பிடியாக, நடுவர் மன்றத்தின் இடைக்காலத்



தீர்வையும் எதிர்த்து கடந்த வருடம் டிசெம்பர், மாதம் அனைத்துக்கட்சி மாநிலம் தழுவிய ஹர்த்தால் ஒன்றை ஒழுங்குபடுத்தினார்கள். அப்போது அவர்கள் காலம் காலமாக அங்கு வாழ்ந்த நூற்றுக்கணக்கான தமிழர்களை கொடூரமாக கொலைசெய்தும், லட்சக்கணக்கில் நாடுவிட்டு தமிழ் நாட்டுக்கு அகதிகளாக புலம்பெயரவும் செய்தார்கள். இத்தனை அட்டூழியங்களை நடைபெற்றபோது பங்கரப்பா தமிழர்களை காக்கவோ அல்லது சட்டத்தை நிலை நிறுத்தவோ எந்தவித முயற்சியும் செய்யவில்லை.

இவை இலங்கையில் 1983ம்ஆண்டு ஜுலை இனக் கலவரத்தின்போது சிங்கள பகுதிகளில் நடந்த இனச் சுத்திகரிப்புக்கு ஒப்பான ஒரு செயல் ஆகும்.இரண்டு சந்தர்ப்பங்களிலும் ஆளுநர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் கண்டு கொள்ளாதது போன்று அப்பாவி மக்களை தவிக்கவிட்டது குறிப்பிடத்தக்கது.

பங்கரப்பாவின் ஆட்சி, தலைவிரித்தாடும் லஞ்ச ஊழல் களமாகவே அமைந்திருந்தது. இவர் வெளிநாடு சென்றிருந்தபோது, இருநூறுக்கும் மேற்பட்ட வருமான வரி அதிகாரிகள், இவரது நெருங்கிய பங்காளி, கர்நாடகாவினை முன்னணி சாராய ஒப்பந்தக்காரருமான தாசப்பாவின் நிர்வாகத்தில் இருந்த எல்லா இடங்களையும் முற்றுகை செய்து சோதனை நடத்தினார்கள். இந்த நடவடிக்கையில் ஒரு தடயமும் கிடைக்காதபோதிலும், அரசியல் வட்டாரங்களில் இது பரபரப்பை ஏற்படுத்தியது.

பி.ஜே.பி. இவர் தொடர்பாக வெளியிட்ட குற்றப்பத்திரிகையில், கர்நாடக ஆட்சி நிர்வாகங்களில், இவரது அமுக்க கை படாத இடங்களே இல்லை என்று குறிப்பிட்டது. கருங்கல் அகழ்வு குத்தகைகள், சாராயக் குத்தகை, ஏலவிற்பனை, தனியார் பாடசாலை அமைப்பு அனுமதி வழங்கல், உயர் பதவி நியமனங்கள் போன்றவை அதில் சுட்டிக்காட்டப்பட்டு இருந்தன. மேலும் விரிவாக குறிப்பிடுகையில் கர்நாடகாவின் இருபது மாவட்டங்களில், பதினொரு மாவட்டங்களுக்கான சாராய குத்தகை தாசப்பாவின் குடும்பத்தைச் சார்ந்தோருக்கே வழங்கப்பட்டன. இத்தகைய ஊழல்களின் மூலம் பல கோடி ரூபாக்களை சுருட்டிக் கொண்டார் என்று நம்பப்படுகிறது. ஆனால் புத்திசாதுரியமாக, இவர் கை



யாண்ட வழிகளின் மூலம் இவரது கைவண்ணங்கள் நிரூபிக்கப்பட முடியவில்லை.

இந்த வகையில் இவர் ராஜ போக வாழ்க்கை தொடர, அதன் போர்வையில் இவரோடு நெருங்கிய அதிகாரிகளும், சகாக்களும் தம் எண்ணப்படியே அக்கிரமங்களை நடாத்தி வந்தனர். குனித்தல் என்று தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தல் பிரசாரத்தின்போது இவரது மந்திரி எஸ்.ரமேஸ் எதிர் கட்சி உறுப்பினர் ஒருவரை பகிரங்கமாக சுட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டார். இவர் இதனை கண்டும் காணாமல் இருக்க முற்பட்ட போது, டெல்லி மேலிட தலையீட்டினால் மந்திரியை பதவி நீக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

பங்கரப்பாவின் இந்த நாட்டுத் துரோக நடவடிக்கைகளால் செய்வதறியாது வெகுண்டெழுந்த சில இந்திரா காங்கிரஸ் கட்சிக்காரார்கள் ஆளுநரிடம் இவருக்கும் இவரது மந்திரிசபைக்கும் எதிராக மகஜர் சமர்ப்பித்தார்கள்.

பங்கரப்பாவின் கடைசி நாட்களில் டெல்கி நிர்வாகம், அதிருப்தியாளர்கள் பக்கம் சாய்வதைத் தடுக்கவும், தனது பதவி இழப்பு நிர்ப்பந்தத்தை தவிர்ப்பதற்காகவும், காங்கிரஸ் நிர்வாகத்துக்கு, தனக்கு மக்கள் மத்தியில் பெரிய ஆதரவு இருப்பதாக காட்டுவதற்காகவும் 10 கோடி ரூபா அரச பணத்தில் பேரணி ஒன்றை நடத்தினார். பேரணியில் கலந்து கொண்ட ஒவ்வொருவருக்கும் ஐம்பது ரூபாய் பணமும், சாராய பாக்கட்டுகள், பிரியாணி பொட்டலங்கள் என்று ஆசைகாட்டி அள்ளி வழங்கப்பட்டது. இருந்தபோதிலும் இவர் எதிர்பார்த்த ஒன்பது லட்சம் மக்களுக்குப் பதிலாக இரண்டு லட்சம் பேர் மட்டுமே கலந்து கொண்டார்கள்.

இறுதியாக நிலமை கட்டு மீறியதை அடுத்து ராவைச் சந்திப்பதற்காக டெல்லி சென்றபோது இவரது ராஜிநாமா கடிதம் கிடைக்காமல் ராவ் சந்திக்க மறுத்து விட்டார்.

பங்கரப்பாவின் வெளியேற்றம், காவேரிப் பிரச்னைக்கு தீர்வு தருமா? கர்நாடக- தமிழக மக்களின் நல்வாழ்வுக்கு வழி காணுமா?

**'தமிழோசை' வாசகர்களிடமிருந்து சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் எதிர்பார்க்கப் படுகின்றன. படைப்புகளை அனுப்பும் போது தங்களுடன் ஒரு பிரதியை வைத்திருக்கவும்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாறுபட்ட சூழலிற் சுயஅடையாளத்துக்கான தேடல்

எல்லாமே காலத்துடன் மாறுகின்றன என்று அறிவோம். ஆனாலும் சில விஷயங்களுக்கு மாற்றமில்லாத நிரந்தரத் தன்மையை வழங்குகிறோம். மதம், மொழி, பண்பாடு தொடர்பான விஷயங்களில் மாற்றங்களைப் பலர் விரும்புவதில்லை. விஞ்ஞானமும் பிற அறிவுத் துறைகளுங் கூட மாற்றங்களை எப்போதுமே மனமுவந்து ஏற்றதில்லை. ஆயினும் மனித சமுதாயத்தில் மாற்றம் தவிர்க்க முடியாதது. மனித விருப்பத்தின் காரணமாக ஏற்படும் மாற்றம் அவ்விருப்பத்தை அனுசரித்தே ஏற்பட அவசியமில்லை. மனித சமுதாயத்தின் விருத்தி மனிதருக்கும் அவர்களது சூழலுக்குமிடையிலான முரண்பாட்டினூடு நடைபெறுகிறது. தனிமனிதருக்கும் சமுதாயத்திற்குமிடையிலான உறவு முரண்பாடுகளையுடையது. சமுதாயத்தில் மாற்றத்தை நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு வகைகளில் வேண்டுகிறோம். நாம் வேண்டும் மாறுதல்கள் நமக்கும் சமுதாயத்திற்கும் உள்ள உறவின் தன்மையாலும் சமுதாயத்தின் முரண்பட்ட கூறுகளில் நாம் எங்கு நிற்கிறோம் என்பதாலும் முடிவாகின்றன.

> நமது பண்பாட்டின் வலிய அம்சங்களை நாம் அடையாளங்கண்டு அதன் உருவத்திற் தும் உள்ளடக்கத்திற் தும் உள்ள உறவின் தன்மையை உணர்ந்து நமக்கென்று ஒரு புதிய சுய அடையாளத்தை உருவாக்கி நிலை நிறுத்த முடியும். நமது மொழியையும் மதங்களையும் கலை வடிவங்களையும் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் அவை பல நூறு வருடங்கள் முன் இருந்தவாறு நாம் பேண முடியாது. அவற்றை நமது புதிய சூழலின் நல்ல பண்புகளுடனும் நவீன உலகினதும் நாம் முடிபு காண வாய்ப்பில்லாத வளமிக்க பன்னாட்டுக் கலை இலக்கியப் பண்பாட்டு வளங்களுடனும் இணைத்து மேம் படுத்த இயலும்.
>
> நவீனத்துவம் என்பது பழமையின் பூரண நிராகரிப்பல்ல. பழமையின் செழுமைப் படுத்தலும் நவீனத்துவத்தின் ஒருபகுதியே. பழமையினை விடச் செழுமையும் வலிமையும் உள்ள ஒரு புதிய பண்பாடு பற்றிய முன்னோக்கிய பார்வை இல்லாமற் பழமையை ஒழிப்பது பற்றிக் கூப்பாடு போடுவது பயனற்றது.
>
> நமது புலம்பெயர்ந்த சமுதாயத்தின் நோய்களை நாம் அடையாளங்கண்டு நல்ல தீர்வுகளை முன்வைக்கவும் ஆதரிக்கவும் வேண்டிய தேவை நமக்குள்ளது.இதில் இளைய பரம்பரையினாது பங்களிப்பு மிக முக்கியமானது.

## மாற்றம் பற்றிய நிச்சய மின்மை

அடிப்படையான மாற்றத்தை விரும்புவோர் கூடச் சமுதாயத்தை முற்றாக அடையாளந் தெரியாத விதமாக மாற்ற முனைவதில்லை. சமுதாயத்தின் சில பண்புகளைப் பேணவும் மேலும் வளர்த்தெடுக்கவுமான தேவையை அவர்கள் ஏற்கிறார்கள். பேண வேண்டிய பண்புகள் எவை என்பது பற்றிக் கருத்துக்கள் வேறுபடலாம். மாற்றம் அவசியம் என்று உணரப் படும் விஷயங்களில் மாற்றத்தால் நன்மையடையக் கூடியவர்கள் தயங்கங்காட்டும் நிலைமைகளை நாம் காணலாம். சில சமயம், புரட்சிகரமான மாற்றங்கள் பற்றிய பிரகடனங்களை முன் வைப்பவர்கள் கூடப் பெண்ணுரிமை, பண்பாடு, குழந்தைகளது உரிமை, மனிதச் சுற்றாடல் போன்ற விஷயங்களின் பழமை பேணுவோராகக் காணப்படலாம். பெண் விடுதலை பற்றிப் பெண்கள் மத்தியில் உள்ள எதிர்ப்புணர்வும் இடதுசாரிகள் சிலர் மத்தியில் உள்ள மனத்தடைகளும் வெவ்வேறு அடிப்படைகளினின்று பிறந்தனவையானாலும் மாற்றம் பற்றிய நிச்சயமின்மை ஒரு பொதுவான அம்சம். ஒரு ஆங்கிலப் பழமொழியைச் சிறிது திரித்துச் சொன்னால் “தெரியாத தெய்வத்தை விடத் தெரிந்த பிசாசு பிழையில்லை” என்ற மனப் பாங்கையே நாம் இங்கு காண்கிறோம்.

மாற்றம் பற்றிய நமது பயங்களையும் மனத்தடைகளையும் நாம் பலவிதமாக நியாயப்படுத்த முயல்வதுண்டு. எவ்வாறாயினும் ஒரு குறிப்பிட்ட மாற்றம் சமுதாயத்திற்கு நல்லதா இல்லையா என்ற வாதத்துக்கு நாம் தயாராக இல்லாதபோது மரபும் வழக்கங்களும் கலாச்சாரமும் நமது அளவுகோல்களாகின்றன. சில சமயம் நியாயமான வாதங்கட்கெதிரான ஆயுதங்களாக எழுகின்றன. நமது வாழ்க்கைமுறையில் ஏற்படும் மாற்றம் சமுதாயச் சூழலில் ஏற்படும் மாற்றங்களையொட்டி நடக்கும் போதே, நம்மாற் புதிய நிலைமைகட்கு முகங்கொடுக்கச் சிரமமாக இருக்கிறது. சுய விருப்பத்துடன் கிராமத்தினின்று நகரத்துக்குப் போகிறவர்கள் கூட, மொழி, மதம் போன்ற பிரச்னைகள் இல்லாமலே, புதிய சூழலிற் தம்மை நிலைநிறுத்திக் கொள்ளத் திணறுவதுண்டு. முற்றிலும் ஆயத்தமற்ற நிலைமையில், தன் எண்ணங்கட்கும் எதிர்பார்ப்புக்கட்கும் மாறாக ஒருவர் இடப்பெயர்ச்சிக்கு ஆளாகும் போது அவர் முகங்கொடுக்கும் பிரச்னைகள் பல.

ஒரு அயல் நாட்டின் சமுதாயம் அந்நியர்களது வருகையைச் சகித்துக் கொள்ளக்கூடும். அந்நியர் தனிமனிதர்களாக வந்து சமுதாயத்தின் ஒரு பகுதியாக நாளடைவில் மாறும் வாய்ப்புகளும் இருக்கலாம். மொழியாலும் மதத்தாலும் பண்பாட்டாலும் இனத்தாலும் வேறுபட்ட மக்கள் கணிசமான தொகையினராக வரும்போது, அவர்களது அயற் தன்மை சில பிரச்னைகட்கு வழிகோல முடியும். ஒரு நாட்டின் அரசியற் சமுதாயப் பாரம்பரியங்களும் பொருளாதார நிலையும் உற்பத்தி உறவுகளின் தன்மையும் அகதிகளாகவோ உழைப்புத் தேடியோ உழைப்புக்கான தேவை காரணமாக வரவழைக்கப்பட்டோ வரும் அயலவர் பற்றிய கண்ணோட்டத்தைத் தீர்மானிக்கின்றன.

## சுய அடையாளத்துக்கான நிர்ப்பந்தம்

வெள்ளை இன மேம்பாடு பற்றிய உணர்வு மிக்க ஐரோப்பிய சமுதாயங்கள் பலநூறு வருட காலமாக வாழ்ந்த யூத இனத்தவர் பற்றிய குரோத உணர்வை இன்னமும் ஒழிக்கவில்லை. நாடோடிகள் (ஜிப்ஸி)பற்றிய தவறான கருத்துக்களும் பகைமை உணர்வும் இன்னமும் பரவலாக உள்ளன. பிற ஐரோப்பிய நாட்டு அகதிகள் மீதும் ‘அதிதி உழைப்பாளர்’ மீதும் இச்சமுதாயங்களில் பொருளாதார நெருக்கடி ஏற்படும் போது தொடுக்கப்படும் தாக்குதல்கைகள் நாம் அறிவோம். இவற்றுக்கான காரணங்களையோ தீர்வுகளையோ நான் இங்கு காணவோ காட்டவோ முனையவில்லை. இந்த யதார்த்தமான சூழல் நம்மீது ஒரு சுய அடையாளத்தைத் திணிக்கிறது. கறுப்பன், அந்நியன், அகதி என்றே நாம் காணப்படுகிறோம்.

மேற்கூறிய விவாதமாகத் திணிக்கப்படும் சுய அடையாளத்தை ஒரு அரசியல் ரீதியான சுய அடையாளமாக்கிச் சகல ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்களையும் இணைக்கும் முனைப்பு இருந்தாலும், அயலிலிருந்து வந்த சமுதாயங்கள் போன்று தமிழர்களும் தமது தாய்மொழி, பிறந்த மண், மதம் என்ற அடிப்படையிலே தமது சுய அடையாளத்தைப் பேண முற்படுகின்றனர். இவ்வாறு சுய அடையாளத்தைப் பேணும் தேவை இரண்டு வேறுபட்ட காரணங்களால் ஏற்படுகிறது. அந்த நாட்டின் மக்களுடன் ஒரு பகுதியாகக் கலக்க முடியாத நிர்ப்பந்தம், குறிப்பாகச் சொன்னால் நிராகரிப்பு, ஒரு காரணம். மற்றது, நாடு பெயர்ந்தாலும் நீக்கிவிட முடியாதபடி மனிதரின் ஒரு பகுதியாக அமைந்துள்ள பழைய சுய அடையாளத்தின் பல வேறு அம்சங்கள்.

அயல்நாட்டிற் குடியேறி அதில் ஒரு பகுதியாகி விடுவதாகத் தீர்மானித்தவர்களும் தமது சுய அடையாளம் பற்றிய பிரச்னையை எளிதாகத் தீர்க்க இயலாதவர்களாகின்றனர். அகதிகாளக வந்தவர்களது பிரச்னை சங்கடமானது. எதிர் காலம் பற்றிய நிச்சயமின்மையால் ஒரு புறம் தமது பழைய சுய அடையாளத்தைப் பேணும் நிர்ப்பந்தத்தாலும் ஒருபுறம் மறுபுறம் புதிய சூழலின் யதார்த்தத்துக்கு ஈடுகொடுக்க வேண்டிய தேவையாலும் ஒரு கலாச்சார இழுபறிக்கு உள்ளாகின்றனர்.

பழக்கப்பட்ட குடும்ப உறவுகளும் தொழில் உறவுகளும் சமுதாய உறவுகளும் புதிய சூழலில் உள்ளவற்றினின்று வேறுபட்டவை என்பதை அறிந்தாலும் நமது அணுகுமுறைகளை மாற்றுவது எளிதல்ல. ஒரு பெண்ணும் குழந்தைகளும் எவ்வாறு குடும்பத் தலைவனுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டு இயங்க வேண்டும் என்பது பற்றிய நமது ஆணாதிக்கக் கோட்பாடுகளைப் புதிய சூழலிலும் குருட்டுத்தனமாகப் பிரயோகிக்கிறோம். சாதி வேறுபாடுகளும் சமுதாய அந்தஸ்து பற்றிய பம்மாத்துக்களும் நம்முடனே கூட இருக்கின்றன. நமது உணவுப் பழக்க வழக்கங்களையும் மாற்றிக் கொள்வதும் நமக்கு எளியதாக இல்லை.

## சூழலின் பிரச்சனைகள்

நம்மைச் சூழவுள்ள சமுதாயத்தில் நாம் ஒரு பகுதியாகுவது பற்றிய அச்சமும் நிச்சயமின்மையும் நமது சுய அடையாயளத்தைப் பழைய சூழலில் இருந்தவாறே பேணுமாறு நிர்ப்பந்தித்தாலும்,அன்றாட தேவைகள் சில மாற்றங்களைப் புகுத்துகின்றன. பெண்கள் வேலைக்குப் போவதும் தனித்து வாழ்வோர் (முக்கியமாக ஆண்கள்) தொகையின் பெருக்கமும் பிள்ளைப் பராமரிப்பின் பிரச்னைகளும் ஏற்படுத்தும் சிக்கல்கட்கு நமது மரபின் அடிப்படையிற் தீர்வுகளைக் காண முடியாது.

பெண்களே சமையல் முதல் வளர்ப்பு வரை சகல வீட்டுப் பொறுப்புக்களையும் ஏற்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு வேலைக்குப் போகும் பெண்கள் மீதும் சுமத்தப்படுகிறது. பிள்ளைப் பராமரிப்பு, சமையல், வீட்டு வேலைகள் போன்ற அலுவல்களில் ஆண்கள் பங்குபற்றுவது அவர்களது ஆண்மைக்கு இழுக்கு என்ற மனோபாவம் இதற்கு ஒரு முக்கிய காரணம். பிள்ளைப் பராமரிப்புப் பற்றிய கருத்துக்களும் குழந்தைகளது உரிமைகள் பற்றிய கருத்துக்களும் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளன. குழந்தைகட்கு அடிப்பது அவசியம் என்ற கருத்து ஏறத்தாழ விதி விலக்கின்றிக் கடைப்பிடிக்கப்படுவதாகவே தெரிகிறது. அதே வேளை, குழந்தைகளின் நச்சரிப்புத் தாங்காமற் கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுக்கும் பழக்கமும் பரவலாக உள்ளது. பெற்றோருக்கும் பிள்ளைகட்குமிடையிலான உறவின் தன்மை நமது மரவுக்கொத்ததாக இருப்பதை நாம் விரும்புகிறோம். திருமண வயது வரையும் (சிலவேளை அதன் பின்னரும்) பெற்றோர் சொற்படிவைப் பிள்ளைகளிடம் எதிர்பார்க்கிற நாம் அந்தவிதமான உறவைச் சாத்தியமாக்கிய சூழல் இங்கே இல்லை எனபதை மறந்து விடுகிறோம். அதுமட்டுமல்லாமல் இலங்கையிற் கூட நிலைமைகள் வெகுவாக மாறிவிட்டதை நாம் நினைப்பதில்லை.

## பொழுதுபோக்கும் கலை முயற்சிகளும்

பொழுதுபோக்கு என்பது புலம்பெயர்ந்த சூழலிற் பிரச்னைக்குரிய விஷயமாகிவிட்டது. அயல், அட்டை என்ற பழைய சுற்றாடல் இல்லாத நிலையிற் குடும்பங்கள் தனித்தே இயங்கும் தேவை ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக, நமது கலையுணர்வினதும் பண்பாட்டினதும் மேம்பாட்டுக்கோ நமது உலக அறிவினதும் சமுதாய உணர்வினதும் மேம்பாட்டுக்கோ நமது உலக அறிவினதும் சமுதாய உணர்வினதும் வளர்ச்சிக்கோ உதவாத பொழுதுபோக்குச் சாதனங்களையே நாம் பெரும்பாலும் நாடுகிறோம். நாம் படிக்கும் பெருவாரியான பத்திரிகைகள் நம் வாழ்வுக்கு அயலானதும் தரத்திற் தாழ்ந்தனவாகவும் இருப்பதும் கவனிக்கத்தக்கது.

நம்மிடையே, உயரிய தரமுள்ள பொழுது போக்குகள்,கலை முயற்சிகள் என்ற பாங்கில் அமைவன அதிகம் இல்லை. ஆயினும் கரு நாடக இசை, இந்திய நடனம் ஆகிய துறைகளில் ஓரளவு வசதி படைத்த நடுத்தர வகுப்பினரது அக்கறை குறிப்பிடத்தக்கது. இங்கும் ஆக்கரீதியான கலை வளர்ச்சி எனற நோக்கை விட எல்லாரையும் போல எங்கள் பிள்ளைகளும் செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தாலும் நமது பண்பாடு என்பது எப்போதைக்கும் மாறாத மரபு சார்ந்த, ஒரு வஸ்து என்ற மனோபாவத்தாலும் வழிநடத்தப்படுகிறது.

தரமான கலை முயற்சிகள், புதிய ஆக்கங்கள், நவீனத்துவம் நோக்கிய நகர்வுகள் என்று குறிப்பிடத்தக்கவை மிகச் சிறுபான்மையோரது கவனத்தையே ஈர்க்கின்றன.

நமது கலை முயற்சிகள் மட்டுமன்றிச் சடங்குகள், விழாக்கள், வைபவங்கள் யாவுமே ‘சாதனைகள்’ பற்றிய நமது வக்கிரமான ஆர்வத்தால் உந்தப்படுவதை நாம் உணர்கிறோம். அரங்கேற்றங்களும், திருமண விழாக்களும், கோயில் உற்சவங்களும் மேலும் மேலும் ஆடம்பரமாகவே நடைபெறுகின்றன. ஆயினும் இவற்றின் சாராம்ஸம் நமது அன்றாட வாழ்வுடனும் சமுதாயச் சூழலுடனும் உறவற்ற இறுகிப் போன ஒரு இறந்த காலத்திலேயே பொதிந்திருக்கிறது. நமது மரபின் மேன்மை பற்றி எந்த ஒரு வெள்ளையனேனும் புகழ்ந்து பேசினால் நாம் அது பற்றிக் குதூகலிப்பதும் நமது மொழி, கலைகள், மதம் என்பனவற்றின் மேம்பாடு பற்றித் திரும்பத் திரும்ப நமக்குள்ளேயே பேசிக்கொள்கிற அரை உண்மைகளும் நமது தாழ்வு மனப்பான்மையின் தோற்றப்பாடுகளே.

நமது மரபு பேணல் சடங்குத்தனமாகவே நடைபெறுகிறது. நம் மரபு என்ன என்ற தெளிவோ அதன் சாராம்சமோ அது புதிய சூழலுக்கேற்ப மாற வேண்டிய தேவையோ பற்றிய அக்கறை நம்மிடம் இல்லை. அது மட்டுமன்றி நமது பழைய சமுதாய வழக்கின் இழிவான சில அம்சங்களை இன்னமும் பேணுகிறோம். சாதி- மத வேறுபாடுகள், சீதனமுறை என்பன முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை. சோதிடம், புதிதாக முளைத்துள்ள எண் சோதிடம் என்பன போன்ற குருட்டு நம்பிக்கைகளும் மூடநம்பிக்கைகளும் நமது வாழ்வில் இன்னமும் ஆதிக்கஞ் செய்கின்றன. நிச வாழ்வின் தேவைகள் அவற்றுக்கு எதிராகச் செல்லும் போது நாம் அவற்றை விட்டுக் கொடுத்தாலும் அவற்றின் மீதுள்ள பிடிப்பு நம்மை விட்டு விலகுவதில்லை.

## சுய அடையாளத் திணிப்பு

நமது சுய அடையாளம் இவ்வாறு நமக்குப் பழக்கமாக இருந்த வாழ்க்கை முறையின் அடிப்படையிலும் நாம் நமது பண்பாடு என்று நினைக்கும் ஒன்றன் அடிப்படையிலும் பேணப்படுகிறது. நம்மை அழுத்தும் சுமைகளைக் களைய நாம் ஆயத்தமாக இல்லை. அவை நம்மை அழகு செய்யும் அணிகலன்களென்று பாசாங்கு செய்கிறோம். ஆயினும் இது வெகு காலத்திற்கு நீடிக்க முடியாது. புதிய பரம்பரையினர் நாம் அவர்கள் மீது திணிக்கும் இந்தச் சுய அடையாளச் சுமையைத் தாங்க ஆயத்தமாக இருக்க மாட்டார்கள். அவர்களது சுய அடையாளம் நம்முடையதைப் போலன்றி அவர்களது நிசமான சூழலின் அடிப்படையிலேயே அமையப் போகிறது. நமது பம்மாத்துக்கள் அவர்களது சுய அடையாளத்தின் விருத்திக்குக் கேடாகவே அமைய முடியும்.

வித்தியாசமான ஒரு சமுதாயச் சூழலுள் ஒரு இளைய பரம்பரையைக் கொண்டு வருவோர், அந்தப் பரம்பரை தாம் வாழ முனையும் ஒரு கற்பனையான வாழ்வை வாழ வேண்டும் என எதிர்பார்க்க முடியாது. புலம்பெயர்ந்த நாம் நமது பண்பாட்டையோ மரபையோ மொழியையோ மதத்தையோ கலை வடிவங்களையோ நிராகரிக்க வேண்டும் என்பது என் வாதமில்லை. நமது பண்பாடும் மரபும் மொழியும் மதமும் கலைகளும் காலத்துடன் மாறுவன என்பதையும் நமது காலத்தினதும் சூழலினதும் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும் என்பதுவே என் வாதம். புதிய தேவைகட்கேற்ற மாற்றங்களைப் பற்றி நாம் துணிவுடன் சிந்திக்க வேண்டும் என்பதே என் வேண்டுகோள். பிழைப்புக்காக ஒரு வாழ்க்கையும் சுய அடையாளம் பேணுகிற பேரில் இன்னொரு வாழ்க்கையும் என்ற விதமான இரட்டை வாழ்க்கை நிலைக்க முடியாது என் அபிப்பிராயம்.

நமது பண்பாட்டின் வலிய அம்சங்களை நாம் அடையாளங்கண்டு அதன் உருவத்திற்கும் உள்ளடக்கத்திற்கும் உள்ள உறவின் தன்மையை உணர்ந்து நமக்கென்று ஒரு புதிய சுய அடையாளத்தை உருவாக்கி நிலை நிறுத்த முடியும். நமது மொழியையும் மதங்களையும் கலை வடிவங்களையும் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் அவை பலநூறு வருடங்கள் முன் இருந்தவாறு நாம் பேண முடியாது. அவற்றை நமது புதிய சூழலின்

(10ம் பக்கம் பார்க்க)

-சி.சிவசேகரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# தமிழோசை

லண்டன நவம்பர் 13, 1992


## புகலிட வாழ்வும் சமூகப் பிரக்ஞையும்

தாயகத்தை விட்டு பல்லாயிரக்கணக்கான மைல்களுக் கப்பால் ஒரு மாறுபட்ட சூழலில், சுவாத்தியம், மொழி, கலாச்சாரம், பண்பாடு பழக்கவழக்கங்கள் மாறுபட்ட நாடுகளில் பெருந்தொகையான தமிழ் மக்கள் தற்போது வாழ்கிறோம். அகதிகளாக வந்தோரும் உழைப்பு தேடி வந்தோரும் இதில் உள்ளனர். பெரும்பான்மையானோருக்கு எதிர்காலம் பற்றிய நிச்சயமின்மையும் தாயகம் பற்றிய நினைவுகளும் புகலிடத்தில் காலூன்றி வாழ முடியாமல் செய்து விடுகின்றன. இருந்தும் புதிய சூழலில் எம்மைப் பொருத்தி எம்மை நாமாக இனம்கண்டு வாழ்கிறோமா?

புகலிடச் சூழலில், பலவிதமானவர்களைக் காண்கிறோம். உழைப்பை மட்டுமே செய்பவர்களிலிருந்து- குற்றச் செயல்களில் ஈடுபடும் விரக்தியுற்ற சில இளைஞர் வரை பல்வேறுபட்ட மனிதர்களைச் சந்திக்கிறோம். மேனாட்டுக் கலாச்சாரத்தில் மூழ்கிப்போய் தமிழை மறந்தவர்கள், தென்னிந்திய தமிழ் சினிமா மோகத்தில் உழலுபவர்கள், கிரிக்கட் கழகங்களில் தம் ஓய்வு நேரத்தை அர்ப்பணித்தவர்கள் போக கலைத்துறையில் ஈடுபடுபவர்கள், சமூக வேலைகளில் அக்கறையுள்ளவர்கள், படைப்பாளிகள் என்று எஞ்சுவோர் ஒரு சிறுபான்மை. அநேகருக்கு, வேலையும் வீடும்போக, தொலைபேசி அரட்டை, வீடியோப் படங்கள் தான் தஞ்சம். மற்றும் பிறந்த நாள் வைபவங்கள், டிஸ்கோ பார்ட்டிகள், தமிழ்த் திரைப்படங்கள் வார இறுதி ஓய்வு நேரத்தை ஆக்கிரமிக்கின்றன.

இந்நிலையில் இந்நாட்டு அரசியல் தன்மைகள் எப்படி மாறுகின்றன. என்றோ, பிரதான கட்சிகள் எதை முன் வைக்கின்றன என்றோ அறிய முற்படுபவர்கள் குறைவு. ஐரோப்பா மற்றும் உலக அரசியலையும், மற்றும் உலகெங்கிலும் உள்ள துன்பப்படும் மக்களைப்பற்றியோ, விடுதலைப் போராட்டங்கள் பற்றியோ அறிய முனைவதில்லை. சுற்றுச்சூழலும், மற்றும் இங்குள்ள அரசியல் நிலைமைகளும் எம்மவரில் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்துவதாகத் தெரியவில்லை. இங்கு நிலவும் இனவாதத்தைப் பற்றிக்கூட பலருக்கு சிந்தனையில்லை. இங்குள்ள பொருளாதார மந்த நிலையும் எம்மவரில் பலரில் பாதிப்பை ஏற்படுத்தத் தவறிவிட்டது போலும். எம்மவரின் அரங்கேற்றங்களையும், கொண்டாட்டங்களையும் ஆடம்பரங்களையும் பார்க்கும் போது இங்கு நிலவும் பொருளாதார மந்தநிலை பற்றிய சிந்தனையே ஏழாது. எம்மிற் பலர், அற்ப கூலிக்கு உழைத்தென்றாலும், நாட்டில் ஒரு குட்டி முதலாளியாக வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் பணம் ஒன்றையே குறிக்கோளாக வாழ முற்படுகிறோம்.

நாம் தற்போது வசதியான மேற்கு நாடுகளில் வாழ முடிந்தாலும துன்பப்படும் மூன்றாம் உலக நாடுகளுக்கு சொந்தமானவர்கள் என்பதை நினைவில் வைத்திருப்பது அவசியம்.

## ஆயுத வியாபாரம்

1982இல் ஈராக்கில் ஒரு கிளர்ச்சியை அடக்குவதாகச் சொல்லி ஒரு முழுக் கிராம மக்களையும் கொன்று குவித்தவர், ஈராக்கிய தலைவன்(?) சதாம் ஹுசைன். 1980இல் ஆரம்பமாகி நடைபெற்ற ஈரான் ஈராக் போரில் ஈரானியக் கைதிகளை மிகக் கொடூரமாக சித்திரவதை செய்து, உலகெங்கும் தடை செய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களை பாவித்து ஏராளமான ஈரானிய மக்களைக் கொன்ற சர்வாதிகாரி. 1988இல் குர்டிஸ்தான் பிரதேசத்தில் நச்சு வாயுத் தாக்குதலினால் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட குர்தீஸ் மக்களைக் கொன்ற மனுக்குலத்துரோகி. 1990இல் சிறிய நாடான குவைத்தை ஆக்கிரமித்து பல கொலைகளையும், மனிதஉரிமை மீறல்களையும் புரிந்தவர் சதாம்.

இவரை பலப்படுத்தி, ஆயுத வியாபாரம் நடத்தியவர்கள் யார்?

தன்னை ஒரு, ஏகாதிபத்திய எதிர்ப்பாளனாகவும், தனது 'புனிதப்போரில்' அனைத்து அராபியர்களும் இணைய வேண்டும் என்றும் கூறும் சதாமின் 'உண்மை முகம்' இந்நாட்டின் பொதுசனத் தொடர்பு சாதனங்களில் வெளிப்படுகின்றது தான்!

ஆனால் 1991இல் சிறிய நாடான குவைத்தை மீட்டு, ஜனநாயகத்தை நிலைநாட்டுவதாகச் சொன்ன அமெரிக்காவும் பிரித்தானியாவும், 1990 வரை தமது 'ஆயுத வியாபாரத்தை' விட்டுவிடவில்லை.

அமெரிக்காவின் ஈரான் ஆயுத விவகாரம் முன்னர் அம்பலப் படுத்தப்பட்டது அறிந்ததே. தற்போது பிரித் தானியா ஈராக்குடன் 1990இல் செய்து கொண்ட இரகசிய ஆயுத விற்பனை வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

திரிக்கப்பட்டும், மறைக்கப்பட்டும், பூதாகரப்படுத்தப் பட்டும் தான் பல செய்திகள் எமக்கு கிட்டுகின்றன. இருந்தும் சிலவேளைகளில் உண்மைகள் தாமதமாகவேனும் வெளியாகின்றன.

உலகெங்கும் இரகசியமாக நடைபெறும் இது போன்ற ஆயுத வியாபாரம்தான் பல நாடுகளின் உள்நாட்டு பிரச்னைகளையும் உக்கிரமடையச் செய்கின்றன.

# ரெலோவின் புதிய பிரேரணைகளுக்கு எதிர்ப்பு

(கொழும்பு நவம்பர் 10)

ரெலோ- சமர்ப்பித்த புதிய பிரேரணைகள்- ஏழு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின், ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பலவீனப்படுத்துவதாக இக்கூட்டிலுள்ள இருகட்சிகள் விமர்சித்துள்ளன. இருந்தும் 'ஒரு அரசியல் தீர்வுக்கு வழி சமைக்கும் திட்டம் இது' என ரெலோ மறுதலித்துள்ளது.

அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் கருத்துத் தெரிவிக்கையில், "இப் புதிய பிரேரணைகள், மங்கல முனசிங்க தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு முன் சமர்ப்பிக்கப்பட்ட ஏழுகட்சி கூட்டமைப்பின் 4அம்சத்திட்டத்தை பலவீனப் படுத்தும்." என்றார்.

"வடகிழக்கு இணைப்பு இடம் பெறாத இப்பிரேரணை எப்படி தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவுசெய்ய முடியும்?" என வினவுகிறார், ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன். மேலும் இவர், இப்பிரேரணைகளின் பின்னணியில் ஜனாதிபதி பிரேமதாசா இருக்கலாம் என மறைமுகமாகக் கூறுவதுபோல, "இப்பிரேரணைகள் ரெலோ தாமாகவே சொந்தமாக கொண்டு வந்தவை தானா?" எனவும் வினவியுள்ளார்.

ரெலோ சார்பில் பத்திரிகைகளுக்கு கொடுத்த அறிக்கையில், அதன் அரசியல் ஆலோசகர் என்.சிறீகாந்தா கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார். "இப்பிரேரணைகள் தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளைத் திருப்திப்படுவதாக அமையும். இனப்பிரச்னையின் எல்லா பரிமாணங்களையும், மற்றும் தற்போது நிலவும் அரசியல் யதார்த்தங்களையும் மனதில் கொண்டுதான் இத் திட்டத்தை நாம் தயார் செய்தோம்".

### பிரேரணைகள்

ரெலோவின் திட்டத்தின்படி, இரு மாகாண சபைகள் வடக்கிலும் கிழக்கிலும் இருக்கும். இவை இரண்டிற்கும் பொதுவாக ஜனாதிபதி போல- சகல அரசியல் அதிகாரத்துடனும் ஒரு ஆளுநர் தெரிவு செய்யப்படுவார். இவர் ஜனநாயக ரீதியில் இரு மாகாணங்களிலுமுள்ள பொதுமக்களால் தெரிவுசெய்யப் படுவார். ஆனால் இத்திட்டத்தில் இரு மாகாணங்களுக்கும் இருவேறு முதல் மந்திரிகளா. அல்லது மந்திரி சபைகள் தானா, என்பது குறித்து தெரிவிக்கப்படவில்லை.

மேலும், ரெலோ புதிய திட்டத்தில் கூறப்படுவதாவது, 'சிங்களவர் பெரும்பான்மையாகவுள்ள அம்பாறை மாவட்டம், அருகிலுள்ள மொனராகலை மாவட்டத்துடன் அதாவது ஊவா மாகாணத்துடன் இணைக்கப்படும். இதேபோல் கிழக்குக் கரையோரப் பகுதிகளிலுள்ள சிங்களப் பெரும்பான்மைக் கிராமங்கள் அருகேயுள்ள சிங்கள மாவட்டங்களுடன் இணைக்கப்படும்.

ரெலோவின் கணிப்பின்படி, மேற்படி நடவடிக்கை மூலம் கிழக்கில் சிங்களவர் விகிதாசாரத்தை 28% ஆகக் குறைக்கலாம். தமிழர்களின் வீதம் 40% ஆகவும் முஸ்லிம்கள் 32% ஆகவும் இருக்கும். இதன்படி, இப்பிரதேசத்திலுள்ள மக்கள் தொகை விகிதாசாரம் 1953இல் இருந்தவாறு பேணப்படும். (தமிழர்கள் 48%, முஸ்லிம்கள் 42%, சிங்களவர் 8%, மற்றையோர் 2%) ஆகவே, 'வடகிழக்கில் தமிழ்-முஸ்லிம் உறவில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாவதற்கு வழியமைக்கும் திட்டம் 'இது' என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார் சிறீகாந்தா.


வடகிழக்கில் சிறீலங்கா இராணுவத்துடன் கை கோர்த்து இயங்கும் ரெலோ சமப்பித்த இத்திட்டம் குறித்து ஏனைய கட்சிகளிடமிருந்து இதுவரை எதுவிதமான கருத்துக்களும்எழுப்பப்படவில்லை. அனுபவம் வாய்ந்த சிங்கள பாராளுமன்ற உறுப்பினர் 'தமிழோசை'க்கு கருத்துத்தெரிவிக்கையில், 'ரெலோ- திட்டத்தின் படி தமிழர் மட்டுமே வட-கிழக்கு ஆளுநர்களாக வாய்ப்பு இருப்பதாகவும், இப்படியான ஆளுநர் தெரிவு முறையில், பாராளுமன்ற தெரிவுக்குழு அங்கத்தவர் பலருக்கு உடன்பாடில்லை எனவும் கூறினார்.

# அரசியல் தீர்வு சாத்தியமாகுமா?

(கொழும்பு நவ.12)

இலங்கை தேசிய இனப்பிரச்னைக்கு, அரசியல் தீர்வை தேடும் முயற்சிகளில், தற்போது ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. ஸ்தம்பித நிலையிலிருந்த, பாராளுமன்ற தெரிவுக்குழு, புதிய ரெலோ, ஈஎன்டிஎல்எவ் பிரேரணைகள் தொடர்பாக ஒரு புதிய உற்சாகம் பெற்றிருக்கிறது. ஈஎன்டிஎல்எவ்ஐச் சேர்ந்தவரும், பாராளுமன்றத் தெரிவுக்குழு அங்கத்தவருமான திரு கே.சிறீநிவாசன் கடந்த புதன் கிழமை, பாராளுமன்ற தெரிவுக்குழு கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கையில், தென்னிலங்கை அரசியல்கட்சிகள் அனைத்தும் இணைந்து இலங்கை, அரசியல் யாப்பை மாற்றி, சமஷ்டி அமைப்புக்கு வழிவகுக்க முடியுமானால், வடகிழக்கு மாகாணங்களை இரு தனி பிரிவுகளாக்க உடன்படுவதாக கூறினார்.

திரு சிறீநிவாசன், ஏற்கனவே இது தொடர்பாக, திருமதி பண்டார



நாயகா திரு மங்கல முனசிங்க, திரு அனுரா பண்டாரநாயக்கா, மற்றும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு எஸ்.பி.குணசேகரா, திரு எம்.எச்.எம்.அஷ்ரப் ஆகியோரையும், மற்றும் தமிழர் கூட்டணித் தலைவர்களையும் முக்கிய அரசாங்க மந்திரிகளையும சந்தித்து தன்னுடைய பிரேரணைகளை தெளிவுபடுத்தியுள்ளார். 1971க்கு முன்னர் நிலவிய இனங்களுக்கிடையிலான ஒரு சமநிலையைப் பேணுவதற்கு, இப்பிரேரணையின்படி வடகிழக்கில் உருவாக்கப்படும் இரு தனிப்பிரிவுகளுக்கும் கூடிளயவு அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்றும் விருப்பம் தெரிவித்துள்ளார்.

அண்மையில், தமிழர் விடுதலைக் கூட்டணி, சமஷ்டி அடிப்படையில் ஒரு தீர்வைச் சமர்ப்பித்தமையும், அப்பிரேரணைக்கு அகில இலங் க தமிழ்க் காங்கிரஸும், சில தமிழ்க் குழுக்களும், அமைச்சர் தொண்டைமான் அவர்களும் எதிர்ப்புத் தெரிவித்தமையும் அறிந்ததே.

தற்போது சமஷ்டி பிரேரணை மட்டுமே, செயற்படுத்தக்கூடியதும், வடகிழக்கு இணைப்புக்கு ஒரு சரியான மாற்றுத்திட்டமாக கொள்ளக் கூடியதுமாக பல எதிர்க்கட்சிகளும், சில அனுபவம் வாய்ந்த மந்திரிகளும் கருதி, இதில் ஒரு புதிய ஆர்வத்தைக் காட்டுகிறார்கள் எனத் தெரிய வருகிறது.

சுதந்திரக்கட்சி முக்கியஸ்தர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில், திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கா, இந்தப் பிரேரணையை தீவிரமாக தன் சகாக்களுடனும், ஆலோசகர்களுடனும் கலந்தாலோசித்து வருவதாக தெரி வித்தார். ஐக்கிய தேசியக் கட்சியி லுள்ள சில முக்கியமான மந்திரிகள் கூட, ஈஎன்டிஎல்எவ் பிரேரணையை அனுகூலமாக, கவனத்திலெடுப்பதாகவும், பண்டா- செல்வா ஒப்பந்தத்தின் ஒரு கூறுபோல இதனை பார்ப்பதாகவும் கருதப்படுகிறது.

ரெலோவின் பிரேரணைகளுக்கு, முஸ்லிம் சிறீலங்கா மக்கள் காங்கிரஸ் உடனடி ஆதரவைத் தெரிவித்துள்ளது. முஸ்லிம் காங்கிரஸ் வடகிழக்கு நிரந்தர இணைப்பை ஆதரித்தபோது அதற்கு எதிராகவே, அண்மையில் முஸ்லிம் சிறீலங்கா மக்கள் காங்கிரஸ் உருவாக்கப் பட்டது. புதிய பிரேரணை தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் தமது கருத்தை இன்னும் தெரிவிக்கவில்லை.

அதேவேளை, சிறீலங்கா சு.க.



எம்பியான மகிந்தா ராஜபக்ச கடந்த புதன் கிழமை நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையில், பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னரே, பொதுத் தேர்தல் நடைபெறும் போது தங்களது பிரேரணைகளை முன்வைக்க இருப்பதாகக் கூறினார்.

நவசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார மேற்படி பத்திரிகையாளர் மகாநாட்டில், ஏழு தமிழ்க்கட்சி கூட்டமைப்பின் 4 அம்சத் திட்டம் குறித்து, அரசாங்கத்தின் கருத்தைத் தெரிவிக்கும் படியும், மேலும் அரசாங்கம் தனது பிரேரணைகளை முன்வைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அம்பாறை மாவட்ட,ரெலோ எம்.பி.யான ஜே.திவ்வியநாதன் கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது மீண்டும் மீண்டும் தமிழ் முஸ்லிம் கட்சிகளின்

(8ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்.

www.tamilarangam.net

# SHANKAR

## நத்தார், புதுவருட, பொங்கல்

பண்டிகைகளை முன்னிட்டு

## 01-12-1992 முதல் 15-01-1993 வரை

விஷேட

# மலிவு விற்பனை

## தமிழ்த்திரைப்பட AUDIO, CD ஆகியன மொத்த விற்பனை விலையில்

அத்துடன்

## இலங்கைத் தயாரிப்புகள்

பதனிடப்பட்ட மீன் வகைகள், மரக்கறி வகைகள், அரிசி மா, மிளகாய்த்தூள், சகலவிதமான பலசரக்குப் பொருட்கள்

என்பவற்றுக்கு

## லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்

# SHANKAR & CO LTD

231 NORTHOLT ROAD, SOUTH HARROW, MIDDLESEX, U.K.

PHONE: 081 426 8960 FAX: 081-861 5248

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

கடிதப்பெட்டியினுள்ளே குவிந்து கிடந்த காகிதங்களில் பழுப்பு நிறத்தில் நீலக்கோடு போட்ட கடிதவுறை ஏதுவும் இருக்கவில்லை.

ரகுநந்தனின் படபடத்த மனம் சற்று ஆறுதலைடைந்தது.

"அன்புள்ள ரகுநந்தா! ஐம்பதுவீதக் கழிவு தருகிறேன்; வாங்கமாட்டாயா?" என்ற 'நியூஸ்வீக்'காரனின் கொம்பியூட்டர்க் கெஞ்சலையும், "வரிகட்ட மறந்துவிட்டாய்! வட்டிபோடப் போகிறேன்" என்ற ஒஸ்லோ மாநகர சபையின் மிரட்டலையும், "மூன்று மணிநேர ஆபாசப்பட நாடாவை மலிவுவிலையில், சாதாரண கடிதவுறையில் அனுப்பி வைக்கவா?" என்ற சுவீடிஷ் விநியோகஸ்தனின் வேண்டுதலையும் காகிதக் குப்பைக் கென்று தனியாக சூழல் பாதுகாப்புவாதிகளால் வைக்கப் பட்டிருந்த பெட்டிக்குள் திணித்துவிட்டு, திரிக் ஸ்ரேசனுக்கு விரைந்தான்.

இப்போதெல்லாம் ஊர்க் கடிதங்களைப் பிரிப்பது சவப் பெட்டிகளின் மூடியைத் திறந்து பார்ப்பது போலாகி விட்டது. ஊரிலிருந்து கடிதம் எதுவும் வரவில்லையென்றால் இன்றைய தினம் வரை தெரிந்து ஒருவரும் சாகவில்லை; அம்மாவுக்கு ஒன்றும் நடக்கவில்லை என்று மனதுக்குச் சமாதானம் சொல்லிக் கொள் ளலாம். நாளை தபாற்பெட்டியைத் திறக்கும்வரை ஒரு தற்காலிக மன நிம்மதியை அழுல்படுத்திக் கொண்டு றெஸ்ரோறன்ரில் கோப்பை கழுவலாம்; அறைக்கு வந்து கோழி வெட்டி கறி காய்ச்சலாம்; பியர் குடித்துக் கொண்டு ரீ.வீ பார்க் கலாம்.

ரகுநந்தனின் இன்றையப் பொழுதை அலுவல்கள் மொய்த் திருந்தன. அம்மாவிடம் கொடுக்கச் சொல்லி செல்வராசா மாமாவிற்கு காசு அனுப்பவேண்டும்;

சிசிலியாவின் பிறந்த நாளுக்குப் பரிசு ஏதாவது வாங்க வேண்டும்; வரித் திணைக்களத்திற்குச் சென்று வரிவீதத்தைக் குறைத்துத் தரும்படி விண்ணப்பிக்க வேண்டும்; குவிந் திருக்கும் உடுப்புகளைத் தோய்த்தாக வேண்டும். எல்லாவற்றையும் ஐந்து மணிக்குமுன் முடித்துக் கொண்டு தாமதம் எதுவுமின்றி ஆறுமணிக்கு சிசிலி யாவிடம் போய்விட வேண்டும். இல்லையென்றால் அவ ளின் வெண் பனியொத்த தோழமையைச் சில தினங்களுக்கு இழக்க நேரிடும்.

செல்வராசா சிவஞான சுந்த ரத்தை மூன்றாவது தடவையில் சரியாக டைப் செய்துவிட்ட வங்கியழகி ஒரு பத்து நிமிடம் காத்திருந்தால் உடனேயே டிராப் டைத் தயார் செய்து தருவதாக சொன்னாள். கடந்த ஐந்து வருட மாக செல்வராசா மாமாவின் பெயருக்குத்தான் அம்மாவுக்கு காசு அனுப்புவது வழக்கம். "குத்துக் கல்லாட்டம் ஐயா உயிரோட இருக்க நீ மாமாவின்ர பேருக்கு காசு அனுப்பிறயாம்" என்று கனடாவிலிருந்து தங்கச்சி கண்ட னத்தைத் தெரிவித்த பிறகும் செல்வராசா மாமாவின் பெயருக்கே தொடர்ந்தும் அனுப்பி வருகிறான். ஆரம்பத்தில் ஐயாவின் பெயருக்கு அனுப்பிய காசோலைகள் ஐயாவை வேட்டி அவிழ்வது கூடத் தெரியாமல் நடுவீதியில் வீழ்த்தி அம்மாவைத் தலை குனிய வைத்தன; "மனிசன் காசைக் காசெண்டு பாராமல் இழுத்தெறியும்" என்று ஐயாவின் புகழ் பரப்பின; ஆனால் 'அவசரத்துக்கு ஐம்பது நூறென்று' அம்மா அயல்வீடுகளுக்கு அலை வதை மட்டும் தடுக்கவில்லை. அதன் பிறகு தான் செல்வராசா மாமாவை நாடத் தொடங்கினான். ஐயாவைப்பற்றி நன்கறிந்த செல்வ ராசா மாமா முழுத்தொகையையும் அம்மாவிடம் கொடுக்காமல் அம்மா கேட்கும்போது மட்டும் தேவையான பணத்தைக் கொடுத்து வந்தார். கை வரண்டுபோனதால் கவலைய டைந்த ஐயா கனடாவிலும ஜேர்மனியிலும் வாழும் மற்றப் பிள்ளைகளிடம் "ரகுநந்தன் இனி எனக்கு மகனில்லை... நீங்கள்தான் எனது பிள்ளைகள்" என்று பிர கடனம் செய்ய, அவர்களும் அகமகிழ்ந்து தங்கள் காசோலைகள் ஐயாவின் பெயருக்கு சிலதடவை அனுப்பினார்கள். ஆனால் ரகுநந்த னைப் போல் தொடர்ந்து ஊருக்குப் பணம் அனுப்ப அவர்கள் பிரியப் படவில்லை; பதிலாக ரகுநந்தனை ஐயாவின் பெயருக்கு அனுப்பச் சொல்லி வற்புறுத்தினார்கள். "வீட் டைவிட்டு வெளிக்கிடாத அம்மா வுக்கு ஏன் காசு?... நீ செல்வராசா மாமாவிட்ட அனுப்புற காசு அம்மாட்ட ஒழுங்காப் போய்ச் சேருமெண்டு நினைக்கிறியா?... அம்மா விளக்கங் குறைஞ்ச மனிசி... அவர் காட்டுற கணக்க மனிசி நம்ப வேண்டியது தானே..." என்று கடிதங்கள் மூலம் ஐயா கொடுக்கும் தொந்தரவு தாங்காமல் ஜேர்மன் தம்பிமார்கள் ஆலோசனை சொல் வார்கள். "டேய் என்ர வேலை பார்க்க எனக்குத் தெரியும்... உங்கட அலுவல்கள் நீங்க பாருங்க" என்று ஆத்திரத்தோடு ரகுநாதன் பதில ளித்து 'அந்தாள் ஒரு போக்கு' என்று அவர்களால் விமர்சிக்கப்பட் டிருக்கிறான்.

வங்கியிலிருந்து பெற்ற டிராப்டை அருகிலிருந்த தபால்நிலையத்தில் சேர்ப்பித்துவிட்டு தொய்யனைத் தாண்டிச் செல்லும் பஸ் ஒன்றில் இடம் பிடித்தான்.

இந்தமுறை நாற்பது வீத வரி அட்டையை இரக்கமில்லாமல் அனுப்பியிருந்தார்கள். அதை இருபது அல்லது இருபத்தைந்து வீதமாக்கிப் பெறுவதற்கு வருடா வருடம் ஒரு குட்டிச் சண்டை அவசியம். ஊரில் இருக்கும் பெற் றோரும் ரகுநந்தனின் வருமா னத்திலேயே வாழ்கிறார்கள் என்று ஊரிலுள்ள ஒரு வழக்கறிஞர் யாராவது உறுதிப்படுத்தினால் வருட இறுதியில் கணிசமான தொகை வருமானத்திற்கு வரி விலக்களிப்பார்கள். செல்வராசா மாமாவைக் கேட்டிருந்தான். அவரும் பெற்று அனுப்புவதாக எழுதியிருந்தார். ஆனால் ஆயிரம் சோலிகளுள்ள அவர் இன்னும் அனுப்பவில்லை. அவர் அனுப்பும் போது அனுப்பட்டும் என்று இருக்க வேண்டியதே தவிர அவரை வற்புறுத்துவது அவனால் இயலாத காரியம். பொறுப்போடு செய்வார்கள் என்று வேறு யாரிடம் கேட்கலாம்? 'குத்துக் கல்லாட்டம் உயிரோடிருக்கும் ஐயா' ரகுநந்தனின் காரியமென்றால் மகிழ்ச்சியோடு மறுத்து விடுவார். அம்மா?.... அம்மா தான் 'வீட்டைவிட்டு வெளியே போகாத விளக்கங் குறைஞ்ச மனிசி'யாகப் பிரகடனப் படுத்தப்பட்டு விட்டாளே!

ஊற்றெடுக்கும் கண்களை ரகு நந்தன் இறுக்கமாக அழுத்திக்கொண் டான்.

வரித்திணைக்களத்தின் வரிசை யிலக்கச் சீட்டின்படி குறைந்தது இரண்டுமணி நேரமாவது காத் திருக்க வேண்டும் என்று கணக்கிட்ட ரகுநந்தன் அந்த வேலையை இன்று கைவிடத் தீர்மானித்தான். இனித் 'தேபான்' எடுத்துக் 'கிளாஸ்மக ஸீனு'க்குப் போய் சிசிலியாவுக்குப் பரிசு வாங்க வேண்டும்.

ஒரு நாள் ரகுநந்தன் கன்ரீனில் பணம் கொடுக்கும்போது பின்னால் நின்ற சிசிலியா சட்டென்று பேர்ஸை பறித்துக் கொண்டாள்.

"நீ ஒரு சினேகிதத் துரோகி! உன் அழகான காதலியைப் பற்றி என்னிடம் இதுவரை எதுவுமே நீ சொல்லவில்லையே!" –அவளின் கைகளில், முப்பத்தைந்து வரு டங்களுக்கு முன் எஸ்.எஸ்.ஸி. பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டி ருந்த அம்மா அழகாகச் சிரித்தாள்.

அது அவனின் அம்மாவின் படம் என்று சிசிலியாவை நம்ப வைக்க ரகுநந்தன் மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது. அம்மா முதலும் கடைசியுமாய் வாழ்க்கையிலே எடுத்த ஒரேயொரு படம் அது ஒன்றுதான் என்று அவளை நம்ப வைப்பது இலகுவான காரிய மல்லவே! தங்கச்சியின் கல்யாண வீட்டுப் படங்களில் கம்பீரமாய் போஸ் கொடுக்கும் ஐயாவிற்குப் பக்கத்தில் அம்மா கூனிக்குறுகி மிரண்டபடி நிற்கும் ஒன்றிரண்டு படங்களில் முகம் தெளிவாகத் தெரியவில்லை. அந்த 'விளக்கங் குறைஞ்ச மனிசி'யைத் தனியாக படமெடுத்து பிலிமை வீணாக்க அவர்களும் விரும்பவில்லை. சில வேளை கடமைக்காக அவர்கள் கேட்டிருந்தாலும் அம்மா பிடிவாத மாய் மறுத்திருப்பா.

ரகுநந்தனுக்கு ஒரு தடவை அந்தப் படத்தைப் பார்க்க வேண்டும் போலிருந்தது.

அம்மாவின் வடிவில் ரகுநந் தனுக்கு மிகுந்த பெருமை.

"அம்மா நீ சரியான வடிவு" – ஆறேழு வயதில் தான் அம்மாவிடம் சொன்னதும், அம்மா "சீ..ஆ" என்று ஆச்சரியப்படுவது மாதிரி நடித்து, "என்ர குஞ்சுப் பெடியன் தான் சரியான வடிவு" என்று சொல்லிக் கட்டிப் பிடித்துக் கொஞ்சியதும் ரகுநந்தனின் இறந்த கால நாட்குறிப்பின் இனிமையான ஒரு பக்கம்.

ஆனால் அந்த 'வடிவு'தான் வசதியான குடும்பத்தில் ஒரேயொரு மகனாகப் பிறந்து அரசாங்க உத்தியோகம் பார்த்த ஐயாவை அம்மாவின் வாழ்க்கையில் அறிமு கப்படுத்திய கொடுமையைப் புரிந் தது.

'கட்டினால் அம்மாவைத்தான் கட்டுவேன்' என்று ஐயா பிடிவா



# அம்மா

**சிப்பி**

தமாய் நின்றபோது கொழுத்த சீதனத்தை எதிர்பார்த்திருந்த ஐயாவின் பெற்றோருக்கு ஏமாற் றத்தோடு சம்மதிப்பதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

'அஞ்சு சதம் சீதனம் வேணாம்' என்றபடி வந்த ஐயாவின் சம்பந்தம், கணவனை இழந்து ஆறு பிள்ளைகளை வளர்த்தெடுக்க வழியின்றித் தவித்துக்கொண்டிருந்த அம்மாவின் தாயைப் பொறுத்தவ ரையில் 'செத்துப்போன புருசன் செய்த புண்ணியம்'. மகளின் விருப்பத்தைக் கேட்கும் அம்மாவும், தாயிடம் தன் விருப்பத்தைச் சொல்லத் துணியும் மகளும் ஆயிரத்தித் தொள்ளாயிரத்து ஐம்பத்தெட்டாம் ஆண்டின் கற்பனைப் பாத்திரங்கள்.

அம்மா ஐயாவின் மனைவியான அடுத்த வருசமே அம்மாவின் தாயும் சகோதரங்களும் வீட்டைவிட்டு ஐயாவினால் வெளியேற்றப்பட் டார்கள். அவர்கள் வீட்டுக்கு வரு வதோ அல்லது அம்மா அவர்களைச் சந்திப்பதோ ஐயாவினால் தடை செய்யப்பட்டது. அதை மீறிய சந்தர்ப்பங்களில் அம்மாவின் வாயில்

இப்போதெல்லாம் ஊர்க் கடிதங்களைப் பிரிப்பது சவப்பெட்டிகளின் மூடியைத் திறந்து பார்ப்பது போலாகி விட்டது. ஊரிலிருந்து கடிதம் எதுவும் வரவில்லையென்றால் இன்றைய தினம் வரை தெரிந்து ஒருவரும் சாகவில்லை; அம்மாவுக்கு ஒன்றும் நடக்கவில்லை என்று மனதுக்குச் சமாதானம் சொல்லிக் கொள்ளலாம். நாளை தபாற் பெட்டியைத் திறக்கும் வரை ஒரு தற்காலிக மன நிம்மதியை அழுல்படுத்திக்கொண்டு றெஸ்ரோறன்ரில் கோப்பை கழுவலாம்; அறைக்கு வந்து கோழி வெட்டி கறி காய்ச்சலாம்; பியர் குடித்துக் கொண்டு ரீ.வீ பார்க்கலாம்.

இரத்தம் கசிவது வழமையாகிப் போனது. தங்களைச் சந்திப் பதனால் அம்மாவுக்குக் கிடைக்கும் சித்திரவதையையாவது தடுக்கும் எண்ணத்தில் அம்மாவின் தாயும் சகோதரங்களும் ஊரைவிட்டே போனார்கள். அம்மாவுக்குத் துணை, ஆறுதல் எல்லாமே நான்கு வயதான ரகுநந்தன் என்றாகிப் போனது.

அவனுக்கு நினைவிலிருக்கும் எல்லா இரவுகளிலும் அம்மா அழுவதைக் கண்டிருக்கிறான். அதனால் இரவுகளையே ரகுநந்தன் வெறுத்தான். நடுச்சாமங்களில் அடிபட்டு அலறும் அம்மாவை, "அஞ்சு சதம் சீதனம் தந்தனியேடி... இப்ப நீ வராட்டி..." என்று உறுமும் ஐயாவைப் பலியாடு மாதிரித் தொடர்ந்து இருளில் மறையும் அம்மாவை காப்பாற்ற முடியாமல் அவனும் பயந்து சத்தமில்லாமல் அழுதிருக்கிறான். கிளிமாமி புருசனையும், ராசலிங்கம் சித்தப்பாவின் மகனையும் பலி யெடுத்த நரிக்குண்டுப் பஞ்சமி ஐயாவையும் ஒரு நாள் பலியெ டுக்கும் என்ற நம்பிக்கையில் நித்தி ரையாகிப் போவான்.

****

பீத்தோவனின் ஒன்பது சிம்போனி களின் தொகுப்பொன்று சுமாரான விலையில் கிடைத்தது. இசைப் பைத்தியமான சிசிலியாவுக்கு பொருத்தமான பரிசை வாங்க முடிந்ததில் மனம் திருப்தியடைந்தது. இனி அறைக்குப் போகவேண்டி யதுதான். இரண்டு முப்பத்திமூன்று திரிக்கைப் பிடிக்க ரகுநந்தன் ஓடுவது போல் நடக்க வேண்டியிருந்தது.

பின்னேரப் பொழுதுகளில் தண் ணியள்ள அம்மாவுக்குத் துணையாக வயல்வெளிக்குப் போவது ரகுநந்தனுக்கு மிகவும் பிடிக்கும். ஐயாவின் இராணுவத்தனமோ தம்பி களின் கூச்சல்களோ தங்கச்சியின் சிணுங்கலோ இல்லாத செம்மஞ்சள் நிறமான அந்த இரண்டு மூன்று மணிநேரம்தான் அம்மா உயிர் வாழும் காலம் என்று ரகுநந்தன் நினைப்பான். கூடு திரும்பும் பறவை களும், "அம்மாவும் பிள்ளையும் தண்ணிக்குப் போறியளே.." என்று கேட்டபடி தண்ணிக் குடத்துடன் நடக்கும் ஒரு சில பெண்களையும் தவிர சந்தடியேதும் இருக்காது. பரந்த வெளியும் விரிந்த வானமும் அம்மாவின் நீளக்கூந்தலைக் கலைக் கும் வயற்காற்றும் ரகுநந்தனுக்கு உற்சாகத்தை வாரியிறைக்கும். வானத்தைத் தொடச் சொல்லி விர் விர் என்று கற்களை வீசுவான்.

தேவதை கதைகளில் வருவது போல் இந்த மாலைப் பொழுது களில் அம்மா உருமாறும் இரகசியம் ரகுநந்தனுக்கு மட்டுமே தெரியும்.

இதே வயல்வெளியில் கரைந் துபோன இளமைக்கால ஞாபகங்கள் அம்மாவைப் பிடித்துக் கொள்ளும். "குழப்பாமல் கேளடா" என்று வலிக்காமல் குட்டிவிட்ட அம்மா 'காற்றினிலே வரும் கீதம்' பாடுவா. ரேடியோவில் கேட்பது போல் இருக்கும்.

"ஒரு சங்கீத ரீச்சராக வரவேணு மெண்ட சரியா ஆசைப்பட்ட னான்"

வானத்தைப் பார்த்தபடி அம்மா சொல்லுவா.

"முந்தி வேலை எடுக்க காசு தேவையில்லை... நல்லாப் படிச்ச எல்லாருக்கும் வேல கிடைக்கும்... நானும் நல்லாப் படிச்சன் ஆனா.." –அம்மாவின் பெருமூச்சு எப்போதும் நீளமாகவிருக்கும். மிகுதி ரகுநந் தனுக்குத் தெரியும். 'அஞ்சு சதம் சீதனம் வாங்காமல்' அம்மாவின் வாழ்வில் படையெடுத்த ஐயா அம்மாவின் எத்தனை கனவுகளில் தீயை வைத்திருக்கிறார்!

"சரி.. அதெல்லாம் போச்சடா.. இப்ப நீ நல்லாப் படிக்கவேணும்.. தம்பிகளையும் தங்கச்சியையும் படிப்பிக்க வேணும்.. அதுதான் இப்ப என்ர ஆசை"

பொசுங்கிப்போன கனவுகளுக்குப் பதிலாக அம்மா புதிய கனவுகளை வளர்த்துக் கொள்ளுவா.

இந்த மாதிரி ஒரு பின்னேரப் பொழுதில்தான், "ராசா கவனமாகப் படியுங்கோ" என்று காணும்நேரங்க ளில் சொல்லிய வண்ணம் புல் நசியாதபடி நடக்கும் 'கடைக்கார மகாலிங்கண்ண'ரும் தானும் ஒரு வரையொருவர் விரும்பியிருந்ததாக அம்மா சொன்னா. ரகுநந்தன் மிகுந்த ஆச்சரியப்பட்டான்.

மகாலிங்கண்ணனின் கண்களில் தெரியும் நேசத்துக்கும், வாஞ்சைக் கும் காரணம் இதுதானா?

கடவுளே இந்த மகாலிங்கண்ணன் எனக்கு ஐயாவாக வந்திருக்கக் கூடாதா?

பல பெண் சகோதரிகளுடன் பிறந்த மகாலிங்கண்ணர் தன் கடமை களை முடித்துவிட்டு வரும்வரை அம்மா காத்திருப்பதாகத் தான் இருந்தாவாம். ஆனால் இடையில் 'அஞ்சு சதம் சீதனமில்லாமல்' ஐயா குறுக்கிட்டபோது மகாலிங்கண்

(11ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "ராஜீவ் - பல உண்மைகள்"

## ஜெயில் சிங் பரபரப்பு பேட்டி

"கடந்த 87ம் ஆண்டு ஊழல் குற்றச்சாட்டுகள் அடிப்படையில் ராஜீவ் அரசை டிஸ்மிஸ் செய்வது குறித்து பரிசீலித்தேன். ஆனால் நாட்டின் நலன் கருதி எந்த நடவடிக்கையும் அப்போது எடுக்கவில்லை" என்று முன்னாள் ஜனாதிபதி ஜெயில்சிங் கூறியுள்ளார்.

ஜெயில்சிங்கின் பதவிக்காலம் முடியும் காலத்தில் அவருக்கும் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் அதிகமாக எழுந்தன. முரண்பாடுகள் குறித்து இருவருமே பகிரங்கப்படுத்தியது இல்லை.

ஆனால் தனது பதவிக்கால இறுதியில் மனம் திறந்த பேட்டி மற்றும் தகவல்களை ஜெயில்சிங் கூறியுள்ளார். . பத்திரிகையாளர் ஹரிஷ் சந்தர் ஒரு நூலாக உருவாக்கி உள்ளார்.

புத்தகத்தின் தலைப்பு 'ராஜீவ் காந்தி- பல உண்மைகள்' என்பதாகும்.

இப்புத்தகத்தை உருவாக்க ஹரிஷ் சந்தர் 16 மணிநேரம் ஜெயில் சிங்கை பேட்டி எடுத்துள்ளார். அது தவிர பல முக்கிய அரசியல் பிரமுகர்களையும் அவர் பேட்டி கண்டிருக்கிறார்.

அகாலிதள தலைவர் லோங்கோவாலுடன் ஏற்படுத்திய ஒப்பந்தத்தை ஜெயில்சிங் ஆதரிக்கவில்லை. ஏனெனில் சீக்கிய மக்கள் அனைவரின் பிரதிநிதி லோங்கோ வால் அல்ல. அர்ஜுன்சிங் பேச்சை கேட்டு இந்த ஒப்பந்தத்தை ராஜீவ் நடத்தினார் என்ற தகவல் இப்புத்தகத்தில் வெளிவந்திருக்கிறது.

அது மட்டுமல்ல இலங்கைக்கு இந்திய ராணுவத்தை அனுப்பிய விஷயத்தில் ராஜீவ் முடிவை ஆதரித்து மாஜி அமைச்சர் நட்வர் சிங் மற்றும் மணிசங்கர் அய்யர் ஆதரவு தெரிவித்துள்ளனர். ஆனால் காங்கிரஸ் பிரமுகரும், டில்லி லெப்டினன்ட் கவர்னராக இருந்த ரொமேஷ் பண்டாரி 'இந்த நடவடிக்கை பெரும் தவறானது' எனக் கூறியுள்ளார்.



'ராஜீவ் காந்தி- பல உண்மைகள்" இல் உள்ள சில விபரங்கள்:

பொதுமக்கள் மற்றும் பிரமுகர்களிற்கு முன்பு மரியாதை கொடுத்தார் ராஜீவ். ஆனால் அலுவல் ரீதியில் என்னை, அவமானப்படுத்தினார் மனம் நோகச் செய்தார்.

ராஜீவ் காந்தியை நான் டிஸ்மிஸ் செய்யாததற்கு இரண்டு காரணங்கள் உண்டு. அதில் ஒன்று "தனது தவறுகளுக்காக ராஜீவ் என்னிடம் மன்னிப்பு கேட்டார்.

இவ்வாறு ராஜீவ் பற்றி ஜெயில் சிங் கூறியுள்ளார்.

இப்புத்தகத்தை பிரதமர் நரசிம்மராவ் நவம்பர் 4ஆம் தேதி டெல்லியில் வெளியிட்டார்.

# பெற்றோரைப் பிரிந்து வாழும் சட்ட உரிமை

பிரிட்டனில், ரோர்க்கி எனும் பகுதியைச் சேர்ந்த 11 வயது ஆங்கிலேய சிறுமி, தனது பெற்றோரிடம் .இருந்து பந்தப் பிரிவினை கோரி ரோர்க்கி நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கு சார்பாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இச்சிறுமியின் பெற்றோர் பிரிந்து வாழ்கின்றனர். தாயார் வேறொரு ஆணுடன் வாழ்ந்து வரும் நிலையில் அதனை ஏற்றுக் கொண்டு வாழ விரும்பாத இவர், இப் பந்தப் பிரிவினைக்கு வழக்கு தாக்கல் செய்தார்.

வளர்ப்புத் தந்தையுடன் வாழப் பிடிக்காமல், தாயாரின் பெற்றோருடன் சென்று வாழ விரும்பிய இவரை, தாயார் தன்னுடன் வளர நிர்ப்பந்தப்படுத்திய போது, சட்ட ஆலோசகர் ஒருவரை இச்சிறுமி நாடியுள்ளார்.

இவரது குற்றச்சாட்டை பரிசீலித்த நீதிபதி வதிவிட ஒழுங்குச் சட்டத்தின் பிரகாரம், தாயாரின் பெற்றோருடன் வாழ தீர்ப்பளித்து, பெற்றோரிடம் இருந்து பந்தப் பிரிவினை வழங்கியுள்ளார்.

பிரிட்டன் சட்டத்துறையில், பந்தப் பிரிவினை வழங்கப்பட்ட 2வது சம்பவம் இதுவாகும். கடந்த பங்குனி மாதம், போர்மிங்காம் பகுதியில், 15 வயது ஆங்கிலச் சிறுமி, தனது தகப்பனிடமிருந்து பந்தப் பிரிவினை பெற்றிருந்தார். இன்று வெள்ளிக்கிழமை (13.11.92) 3வது சிறுமி பெற்றோரிடமிருந்து பந்தப் பிரிவினை கோரிய வழக்கு லீட்ஸ் பகுதியில், நீதிமன்றிற்கு வருகிறது.

SUNRISE RADIO
24 hr RADIO STATION
1413 KHz 212 MW

தமிழ் ஒலிபரப்பு

அஸ்ரா சற்றலைட் மூவி சனல்18, (இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகளிற்கு)

16.11.92 திங்களிரவு
10.00-11.00 மணி

நிகழ்ச்சிகள்

*செய்திகள்
*பக்திப்பாடல்
*வாழ்த்துவோம்
*இன்றைய நேயர்


*பாட்டும், போட்டியும்

# அரசியல் தீர்வு சாத்தி ...........

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பிரேரணைகளைக் கேட்டு ஒரு உடன்பாட்டுக்கு வருமாறு வற்புறுத்தி நேரம் தாழ்த்தாமல், அரசாங்கம் தனது பிரேரணைகளை முன்வைக்க வேண்டும் என்றார். சமசமாஜக்கட்சி எம்.பி. அதாவுட செனிவரத்தின சமஷ்டி அமைப்பில், இந்தியாவில் வழக்கிலுள்ளது போல, மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்குவதானால் தாங்கள் அரசுக்கு ஆதரவு தருவதாக தெரிவித்தார்.

இந்த வாரம் வெளியிடப்பட்ட புதிய ரெலோ, ஈஎன்டிஎல்எவ். பிரேரணைகளை அடுத்து புதிய நம்பிக்கைத்துளிகள் விதைக்கப்பட்டபோதும், சில அவநம்பிக்கை வாதங்களும் முன்வைக்கப்படுகின்றன. தமிழ்க் கட்சிகளின் கூட்டில் ஒரு பிளவு ஏற்பட இது காரணமாக அமைகிறது. குமார் பொன்னம்பலம் தொண்டைமான் மற்றும் சில தமிழ்க்குழுக்கள் ஆக்ரோஷமாக இந்த சமஷ்டி அடிப்படையிலான தீர்வை எதிர்க்கிறார்கள். அவர்கள் சிறீலங்கா முஸ்லீம் காங்கிரசுடன் வடகிழக்கு நிரந்தர இணைப்பு குறித்து நிகழ்த்திய நீண்ட உரையாடல் எல்லாம் வீண் பேச்சாகி விடும். எப்படியாயினும்,சில சு.க.



கட்சியினர் இப்பிரேரணைகளை அடிப்படையாக வைத்து ஒரு விரிவான திட்டத்தை தயார் செய்யலாம் என அபிப்பிராயப்படுகின்றனர். இந்த சமஷ்டி தீர்வை சகலரும் ஏற்றுக் கொள்ள வைப்பதற்கான வேலைகள் நடக்கும் வேளையில், தமிழர் கூட்டணியினர், ஏழு கட்சி கூட்டமைப்பின் பிளவு குறித்தும், உள் சண்டைகள் குறித்தும் கவலையடைந்துள்ளதாகத் தெரிகிறது.

WIMBLEDON SPORTS CLUB PRESENTS
Night Of The Dancers
Non Stop Disco Presented
By
Calibar Roadshow
The Complete Professional Discotheque





Venue
Fairfield Halls
Park Lane, Croydon CR9 1DG
(Nearest B.R. Station East Croydon)
On
Saturday 21st November 1992
Time 7.00 Pm Till Late
Prizes Include Tickets To Paris. Competion For Best Boy and Best Girl Dancers.
For Advance Booking Tel. 081 767 2437



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புகைப்படக் கலைஞர் செவ்வி

திருச்சியில் பிறந்த ஜோன் கருணாகரன் ஐஸக் ஐக்கிய நாடுகள் அமைப்பில் புகைப்படக்காரராகவும் புகைப்பட ஆசிரியராகவும் (Photographer & Photo Editor) பணியாற்றும்போது, அவர் மத்திய கிழக்குப் பகுதியில் லெபனான்; கிழக்கு ஆசியாவில் படகு அகதிகள்; சைனாவின் முதல் நவீனமுறை மக்கள் கணக்கெடுப்பு; ஆபிரிக்கக் கண்டம் முழுவதிலும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்கள் என்று பல நிலைமைகளையும் புகைப்படப் பதிவு செய்வதில் ஈடுபட்டவர். ஏராளமான சர்வதேசப் பரிசுகள் பெற்றுள்ள ஜோன் ஐசக்கை Technical Photography என்ற பிரபல புகைப்பட சஞ்சிகை பேட்டி கண்டது. 'இனி' சஞ்சிகையில் வெளியான அதன் முக்கியமான பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.

கே: ஐ.நா.வில் பணியாற்றும் வாய்ப்பு உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?

ப: அமெரிக்காவிற்குப் போக வேண்டும் என்ற விருப்பம் எனக்கு இருந்தது. ஏனென்றால் எனக்கு கிதார் வாசிக்கத் தெரியும். தவிரவும் ஒரு நாட்டுப்பாடல் பாடுபவனாக (Folk Singer) வேண்டும் என்று விரும்பினேன்.

கே: ஐ.நா.வில் உங்களுக்கு எப்படி வேலை கிடைத்தது?

ப: ஐ.நா.பாடகர்கள் குழுவில் ஒரு தனிப்பாடகனாக நான் சேர்ந்தேன். பிறகு ஒரு 'மெஸ்ஸஞ்சர்' வேலை எனக்குக் கிடைத்தது. ஆனால் வேலையைவிட அதிகப் படிப்பு எனக்கு இருந்ததால் எழுத்தர் வேலை ஒன்று கொடுத்தார்கள். ஒன்றரை ஆண்டு இப்படிப் போயிற்று. இந்த சமயத்தில் என் சகோதரர் ஒரு கேமராவை எனக்கு அனுப்பினார். நான் புகைப்படங்களை எடுக்க ஆரம்பித்தேன். ஐ.நா. புகைப்படப் போட்டியில் கலந்து கொண்டேன். முதல் பரிசு கிடைத்தது.

கே: அந்தப் படம் எதைப் பற்றியது?

ப: இந்தப் போட்டியின் கருப்பொருள் 'மனிதனின் கை'. ஆறு குழந்தைகளைக் கொண்ட ஒரு குடும்பத்தை நான் புகைப்படம் எடுத்தேன். 'வேலையற்ற கைகள்' என்று தலைப்புக் கொடுத்தேன். இந்தப் போட்டி நடந்த அதே நேரத்தில் ஐ.நா. கேமரா கிளப் என்னுடைய புகைப்படம் ஒன்றைக் கண்காட்சியில் வைத்தது. புகைப்படப் பிரிவின் தலைவர் அதைப் பார்த்து விட்டு என்னை அப்பிரிவில் சேரச் சொன்னார். ஆக, லாபாரட்டிரியில் புகைப்படங்களைக் கழுவ ஆரம்பித்தேன். ஆறு மாதங்களுக்குப் பிறகு ஜார்ஜ் டைஸ் மேற்பார்வையின் கீழ் புகைப்படங்களைப் பிரிண்ட் செய்யும் பயிற்சியை மேற்கொண்டு ஐ.நா. புகைப்படங்களைப் பிரிண்ட் செய்தேன். அதே நேரத்தில் தொடர்ந்து புகைப்படப் போட்டிகளில் கலந்து கொள்ளவும் செய்தேன். 1975-ல் மினோல்டா பரிசு கிடைத்தது. 1978-ல் போட்டேதா-கினாவின் தங்கப்பதக்கமும் கிடைத்தது. அப்போதிலிருந்து மினோல்டாவுடன் எனக்கு நெருங்கிய உறவு ஏற்பட்டது. ஏனென்றால் மினோல்டோ காமிராக்களையே நான் பயன்படுத்தி வந்தேன்.

கே: 'பார்க்கும்' திறமையை, உங்களுக்குக் கிடைத்துள்ள வெற்றியை, உங்களுடைய பின்னணியில் எது உங்களுக்குத் தந்தது?

ப: நான் இந்தியாவில் இருந்த போது ஓவியக் கலையைப் பயின்றேன். இன்றைக்கும் எனக்கு வாட்டர் கலர்களில்ஆர்வம் உண்டு. புகைப்படக்காரனாக எனக்குக் கிடைத்த வெற்றிக்கு என்னுடைய ஓவிய உணர்வுதான் காரணம் என்று திட்டவட்டமாகக் கருதுகிறேன். ஏனென்றால் கலையமைப்புரீதியாக நான் பார்ப்பதால் முதலிலிருந்தே புகைப்படக் கலையில் ஈடுபடுவது எனக்கு எளிதாக இருந்தது. ஓவியத்தைப் போலவே புகைப்படம் எடுப்பதும்கூட விகிதப் பொருத்தங்கள் பற்றியும் ஒழுங்கமைப்பு (Composition) பற்றியும் ஒரு உணர்வை எனக்குத் தந்தது. மேலும் எனக்கு ஜனங்களைப் பிடிக்கும்.

கே: ஐ.நா.வில் உங்களுக்குத் தரப்பட்ட முதல் பணி எது?

ப: 1978-ல் அப்போது நான் லேபாரட்டரியில்தான் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். மத்தியக் கிழக்கில் இஸ்ரேல்-லெபனான் போரைப் பற்றிய புகைப்படம் எடுப்பதற்காக என்னை ஐ.நா. தற்காலிகப்படைகளுடன் அனுப்பினார்கள். உண்மையில் நான் எங்கு போகிறேன், நிலைமை என்ன என்பது பற்றி எனக்கு ஒன்றுமே தெரிந்திருக்கவில்லை; நீச்சல் தெரியாமல் தண்ணீரில் தள்ளிவிட்டாற் போலத்தான். வெவ்வேறு குழுவினர் அதிகாரத்தில் இருந்த பல சோதனைச் சாவடிகளின் வழியே ஒவ்வொரு நாளும் நான் போக வேண்டியிருந்தது. எனக்கு அது மிகவும் திகிலூட்டுகிற ஒரு அனுபவம். வாழ்க்கையை உண்மையிலேயே மிகவும் வித்தியாசமான கோணத்திலிருந்து நான் பார்த்தேன்.



படகு அகதிகள் (Boat People): 1975-இல் வியத்நாம், லாவோஸ், கம்பூசியா ஆகிய நாடுகளில் அமெரிக்காவும் அமெரிக்க ஆதரவாளர்களும் தோற்கடிக்கப்பட்டு போர் முடிவுக்கு வந்தது. அதன் பிறகு ஏற்பட்ட குழப்பமான நெருக்கடியான சூழ் நிலையில் தங்கள் வாழ்க்கை பற்றிய நிச்சயமற்ற உணர்வு கொண்டு ஆயிரக்கணக்கில் சிறுபடகுகளில் வெளியேறியவர்கள்தான் இந்தப் படகு அகதிகள்.

கே: நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று குறிப்பாக ஏதேனும் சொல்லியனுப்பினார்களா?

ப: முக்கியமான வேலை ஐ.நா. படைகள் லெபனானில் பணிபுரிந்ததைப் பதிவு செய்வது தான். நாங்கள் பெய்ரூட்டில் தங்கி தினமும் படைகளிருந்த இடத்திற்குப் போய் வந்தோம். அவர்களுடைய சூழ்நிலை, அவர்கள் எந்த நிலைமையில் இருந்தார்கள் என்பதை அறிவது தான் எங்கள் வேலை. நான் திரும்பியதும் என்னை உதவிப் புகைப்பட ஆசிரியராக நியமித்தார்கள்.

கே: மறுபடியும் நீங்கள் வெளியே போனீர்களா?

ப: ஆமாம். 1979-ல் அப்போது படகு அகதிகள் மிகுந்த எண்ணிக்கையில் வந்து கொண்டிருந்தார்கள். அதைப் புகைப்படப் பதிவு செய்ய யுனிசெஃப்(UNICEF)என்னை அனுப்பிற்று. தென்கிழக்கு ஆசியாவில் எங்கெல்லாம் அகதிகள் இருந்தார்களோ அங்கெல்லாம் ஒன்பது வாரங்கள் பயணம் செய்தேன்.

கே: இதற்கு எப்படித் தயாரானீர்கள்? இவ்வளவு நீண்ட நாட்கள் இதைச் செய்வது கஷ்டமாக இருந்திருக்குமே?

ப: இந்தியாவிலிருந்து நான் வருவது ஒரு அனுகூலமே என்று எனக்குத் தோன்றுகிறது. என்னுடைய தேவைகள் அதிகமில்லை. அடிப்படை வசதிகள் மட்டுமே போதும். நான் எந்த உணவையும் சாப்பிடுவேன். எனக்கு இரண்டு பேண்ட்களும் இரண்டு சட்டைகளும் போதும். இதுதான் வேண்டுமென்று எனக்கு இல்லை. மேலும் ஒரு உள் உந்துதல், எதையும் மேம்போக்காகச் செய்யக்கூடாது என்பது காரணமாக இருந்திருக்கிறது. என்னுடைய வேலை ஜனங்களைப் பேட்டி காண்பது அல்ல. ஆனால் அவர்களுடன் பேசுவது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. வெறுனே போய் காமராவை இயக்கிக் கொண்டிருப்பதைவிட. என்னுடைய வேலை புகைப்படம் பிடிப்பது மட்டும்தான், என்ன நடக்கிறது என்பதில் ஈடுபடுவது சம்பந்தப்படுவது அல்ல என்று இருக்க முடியாது. நான் எல்லாவற்றிலும் சம்பந்தப்படுகிறேன். நான் யாருக்காவது உதவ முடிந்தால் முதலில் அவர்களுக்கு உதவத்தான் விரும்புகிறேன். பிறகுதான் புகைப்படம் எடுப்பது எல்லாம்.



கே: இந்த மாதிரி சூழ்நிலையில் உங்கள் மனம் எவ்வாறு இருந்தது என்று சொல்ல முடியுமா?

ப: இரண்டு வழிகள் இருக்கின்றன. நீங்கள் படம் பிடிக்கும் விஷயத்தைப் பற்றிய பின்னணியைத் தெரிந்து கொள்வது மிகவும் மோசமான விஷயம் எதுவும் நடக்கலாம் என்று எதிர் பார்ப்பது. நான் முக்கியமாகக் கருதும் விஷயம், நான் எடுக்கும் படங்கள் யாரையும் இழிவு செய்யக்கூடாது என்பதுதான். சில வருடங்களுக்குமுன் Geo பத்திரிகைக்காக நான் ஜிப்ஸிகளைப் பற்றி ஒரு புகைப்பட விளக்கம் ஒன்றைத் தயாரித்தேன். இதில் அவர்களுடைய தொல் குடிகளுடன் வரலாற்றுரீதியாக அவர்களைத் தொடர்புபடுத்தினேன். இந்த ஜிப்ஸிகளுடன் நான் இருபது நாட்கள் தங்கினேன். அவர்களுடைய நம்பிக்கைகள், அவர்களுடைய வாழ்க்கை முறை எல்லாவற்றிலும் நான் பங்கு பெற்றேன். அவர்கள் மிகவும் ஏழ்மையானவர்கள். ஆனால் அவர்களுடைய ஏழ்மையைக் காட்டுவதில் எனக்கு ஆர்வம் இருக்கவில்லை. நான் காட்ட விரும்பியதெல்லாம் அவர்கள் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான். நாம் இங்கு நம் வாழ்க்கையில் எல்லாவிதப் பொருட்களாலும் விஷயங்களாலும் சூழப்பட்டிருக்கிறோம். நம்முடைய வாழ்க்கை அளவுகோல்களின் படி அவர்கள் ஏழ்மையாக இருந்தாலும் எப்படிப் பலவிதங்களில் மிகச் செழுமையாக இருக்கிறார்கள் என்பதைக் காண்பது மிகவும் புது அனுபவமாக இருந்தது. அவர்களை ஒரு எதிர்மறையான கோணத்தில் என்னால் காட்டியிருக்க முடியும். (சிலவேளைகளில் இது சரியானதாகக்கூட இருக்கும்.) ஆனால் இந்த ஜிப்ஸிகளுடையே நான் கண்டது. பதிவு செய்தது மற்ற அம்சத்தைத்தான்.

‘நான் பரபரப்பான படங்களுக்காக முனைவதில்லை. செய்தியைத் தெரிவிக்கும் படம் தான் எனக்கு முக்கியம்.’

-ஜோன் கருணாகரன் ஐஸக்

கே: ஒரு முக்கியமான கேள்வி. எந்த அளவுக்கு நீங்கள் தனிநபர்களின் அந்தரங்க வாழ்க்கைக்குள் ஊடுருவுகிறீர்கள்? இது புகைப்படம் எதற்காக என்பதுடன் சம்பந்தப்பட்டது என்று நினைக்கிறேன். நீங்கள் பேசிக் கொண்டிருக்குமபோது இங்கு அமெரிக்காவில் 1930இல் FSA (அமெரிக்க புகைப்படச் சங்கங்களின் இணையகம்) செய்த முயற்சியைப் பற்றிய நினைவு வந்தது. நீங்கள் செய்து கொண்டிருப்பதற்கும் அவர்கள் செய்வதற்கும் ஒரு பொதுவான அம்சம் காணப்படுகிறது. அந்தப் புகைப்படங்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: டொரதியா லாங், ஜீன்ஸ்மித், கார்த்தியே பிரெஸ்ஸோன் ஆகியோரின் புகைப்படங்கள் எனக்கு மிகவும் பிடிக்கும். இவர்கள் என்னுடைய புகைப்படக்கலையை மிகவும் பாதித்திருக்கிறார்கள்.

கே: ஏன் உங்களுடைய புகைப்படங்களுடன் இவர்களுடைய புகைப்படங்களைத் தொடர்புபடுத்துகிறீர்கள்? இவர்களுடைய புகைப்படங்களில் மிகவும் வலுவான மனிதாபிமானத்தை நான் பார்க்கிறேன்.

ப: உண்மைதான். ஜீன்ஸ்மித்தான் (ஜீக்ஸ்மித்: உலகப் புகழ்பெற்ற புகைப்படக்காரர். ஜப்பானிலுள்ள தொழிற்சாலைக் கழிவுகளால் மாசுபட்ட சுற்றச்சூழலில் வாழும் ஆயிரக்கணக்கானவர்களைப் பாதித்துள்ள 'மின்னிமாட்டா நோய்' பற்றி தன் புகைப்படங்கள் மூலம் உலகின் கவனத்தை ஈர்த்தவர்.) எப்போதும் எனக்கு ஆதர்ஸமாக இருப்பவர். தான் புகைப்படம் எடுத்த மக்களைப்பற்றி அவர் மிகவும் உண்மையான அக்கறை கொண்டிருந்தார். நான் புகைப்படக் கலையில் இவ்வளவு ஈடுபட்டதற்கு உண்மையான காரணம் இதுதான்: ஒரு செய்தியைச் சொல்ல முயல்கையில் இன்னொருவருடைய வாழ்க்கையின் ஒரு பகுதியைக் காட்ட வேண்டும் என்று தான் நினைக்கிறேன்.

கே: ஆக, நீங்கள் உணர்ச்சிபூர்வமாக ஈடுபடுகிறீர்கள்?

ப: ஆமாம். படகு அகதிகள் விஷயத்தில் இப்படிப்பட்ட ஈடுபாடு இருந்தது. மிகவும் துன்பத்திற்கு ஆளான மக்கள், எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடிவந்த மக்கள், துஷ்பிரயோகம் செய்யப்பட்ட குழந்தைகள், மூழ்கிக் கொண்டிருந்த ஜனங்கள் இவர்களைத்தான் நான் திரும்பத் திரும்பப் பார்த்தேன். தப்பிப்பிழைப்பதற்கான வாய்ப்பு தங்களுக்கு 50% மட்டும்தான் என்பது கிட்டத்தட்ட எல்லாருக்குமே தெரிந்திருந்தது. இருந்தாலும் அவர்கள் தப்பித்து வந்துகொண்டிருந்தார்கள். இதனால் பலன் கிட்டும் என்று அவர்கள் சொல்வார்கள். ஒருமுறை ஒரு பெண்ணைப் பார்த்தேன். அவளுடன் இருந்ததெல்லாம் ஒரு குழந்தை மட்டும்தான். அந்தக் குழந்தையை நான் புகைப்படம் பிடிக்க விரும்பினேன். ஆனால் முதலில் நான் செய்தது, மருத்துவ வசதிகள் இருந்த ஒரு முகாமுக்கு அவளைக் கொண்டு சென்றதுதான். அவளுக்குக் காசநோய் கண்டிருந்தது. அவளைக் கிட்டத்தட்ட நான் தூக்கிக் கொண்டுதான் போனேன். அங்கே நிறையப் பேருக்குக் காசநோய் இருந்தது. அடுத்தநாள் அவள் எனக்குச் சொல்லி அனுப்பினாள். அவள் சொன்னாள்: 'என்

(11ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 1 சொல்லாரம்

திருவரங்கன்

நவம்பர் 24ந் திகதிக்கு முன் கிடைக்கும் விடைகளில் முதலாவதாக எடுக்கப்படும் சரியான விடைக்கு

**பரிசு 20 பவுண்கள்**

**இடமிருந்து வலம்:**

1. மதுரையை தீக்கிரையாக்கிய கற்புக்கரசியைப் பற்றிய காப்பியம்.(8)
4. வானில் மின்னுவது- வைரங்களாக சிதறியவை.(4)
6. தடை என்று சொல்வார்கள். அதை மீறுவது நன்மையாகலாம். தீமையும் ஆகலாம்.(4)
8. கணக்கிடுவது.(2)
9. தலைமுறை என்றும் சொல்லலாம்.(3)
11. கோயிலில் பூஜையை ஏற்று நடத்தும் பக்தர்கள் கொடுப்பது.(4)
12. இருந்த இடம்.(3)
13. இது ஒரு நீர்மலர்- இரவில் மலர்வது. தாமரை அல்ல.(3)
14. நித்திரை செய்.(2)

**வலமிருந்து இடம்:**


3. தேர்வில் கிடைப்பது.(3)
15. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் இந்த வகையைச் சேர்ந்தது.(2)

**மேலிருந்து கீழ்:**

1. ஓவியம் என்பார்கள். இது பேசுதடி என்பது பாடல்.(5)
2. திரைகடல் ஓடியவருக்குத் தெரியும் இது.(5)
5. திரும்பவும்- முன்பின்னாக அல்லது பக்கமாக அல்ல.(4)
7. அறவழியில் வாழ்பவர் இதைச் சேர்த்துக் கொள்வார்கள். கடைசியில் கூட வருவது இது.(5)
8. கள்ளத்தனமான.(3)
9. கமக்காரர் நெல் விதைக்குமிடம்.(3)
10. கூட்டல் கணிதக் குறியீடு.(2)
11. பெண்களின் முகத்தில் பவளமாக திகழும் அங்கம்.(3)
13. உள்ளே.(2)

**கீழிருந்து மேல்:**

3. கொஞ்சம் என்று சொல்லாம்.(2)
16. காளியம்மனுக்கு நாம் கொடுப்பது.(2)




உங்கள் முகவரி

பெயர்.............................................
முகவரி .............................................
.............................................
.............................................
தொலைபேசி.............................................

**பதில் அனுப்பவேண்டிய முகவரி**

சொல்லாரம் – 1
THAMIZHOSAI
253,Western Avenue
Londan W3 OPP

## லண்டன் நிகழ்வுகள்.....

நவம்பர் 14 சனி
மாலை 6.00
பிறென்ற் தமிழ்ச் சங்கத்தின் 'தீபாவளி விழா'இல் நாடகங்கள், பட்டிமன்றம், கலைக்கதம்பம் ஆகியன இடம் பெறுகின்றன.
இடம்: *Alperton High School, Ealing Road, Wembley.*
விபரங்கட்கு: 071 388 3536

நவம்பர் 14 சனி
பி.ப. 6.15மணிக்கு
செல்வன் குமுதன் சிறீஸ்கந்த ராஜாவின் மிருதங்க அரங்கேற்றம்.
இடம்: பொது நல நாடுகள் மண்டபம்
விபரங்கட்கு: 081 942 8036

நவம்பர் 15 ஞாயிறு
மதியம் 12.30மணி
ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த கூட்டமும் ஒன்று கூடலும் இடம்பெறும்.
இடம்: *LolaJones Hall, Greaves Place off Garrat Lane, Tooting.*
விபரங்கட்கு: 081 681 2052 / 692 0823

நவம்பர் 18 புதன்
மாலை 4.00மணி
அகதிகளுக்கான விசேட பிரார்த்தனை
இடம்: *West Minisiter Abbey*க்கு அருகில் உள்ள *ST.Magarets Church*இன் முன்னால் இரவு 9.00மணிக்கு தமிழ் மக்கள் கலந்து கொள்ளும் விசேட பிரார்த்தனை

நவம்பர் 19 வியாழன்
மாலை 6.30
அகதிகள் ஆலோசனைக் கூட்டம்
இடம்: *ST. Pauls Church 227, Burges Road, East ham London E6.*
விபரங்கட்கு: 081 478 0577

நவம்பர் 21 சனி
நண்பகல் 12.00மணி
அகதிகள் சட்ட மூலத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டம். அகதிகள் உரிமைக்கான தற்காலிக அமைப்பான *RAHCAR* இதனை ஒழுங்கு செய்துள்ளது.
ஆரம்பிக்கும் இடம்: *Hyde Park*
முடிவடையும் இடம்: *Trafalgar Square*
விபரங்கட்கு: 081 748 6682; 071 738 6408 / 251 5675

நவம்பர் 21 சனி
மாலை 7.00மணி
பரத நாட்டிய அரங்கேற்றம் செல்வி.பிறிசில்லா நீலம்
இடம்: *Acton Town Hall High Street, Acton W3*
விபரங்கட்கு: 081 204 1835

நவம்பர் 28 சனி
மாலை 7.00மணி
ஷேக்ஸ்பியர் நடனக் கல்லூரி அளிக்கும் நடன நிகழ்ச்சி. நிருத்தப் பெரியார் வெங்கடாசலபதியும் அவரது சிஷ்யை ஷேனிகா ஷேக்ஸ்பியரும்.
இடம்: *Claremont High School Claremont Avenue, Kenton Harrow, Middlesex.*
விபரங்கட்கு: 081 951 0594

நவம்பர் 28 சனி
மாலை 6.30மணி
மட்டு. பல்கலைக்கழக அபிவிருத்தி சபை (*BUDS*)யின் ஒன்று கூடலும் இராப்போசனமும்.
இடம்: *Alperton High School Ealing Road, Wembley*
விபரங்கட்கு: 081 886 7530
081 561 7629

**இப்பகுதியில் தங்கள் நிகழ்ச்சிகளை பிரசுரிக்க விரும்பும், ஸ்தாபனங்கள் எமக்கு விபரங்களை அனுப்பி வைக்கவும்.**

# வாரபலன்

-வனவாஸி-

### மேடம்

ராசி நாதன் செவ்வாய் 4ம் இடத்தில் நீசமாகி நிற்பதால் தாயார் உடல் நிலை பாதிக்கும். உத்தியோகத்துறையில் இருந்த இறுக்கமான சூழ்நிலை நீங்கி உயர்வு ஏற்படும். மனைவி வழியில் லாபம் ஏற்படும். குடும்பத்தில் கலகலப்பான நிலை உண்டாகும். பொதுவாக உங்களுக்கு இது ஒரு சுமாரான வாரமாகும்.

### இடபம்

கேளிக்கைகளில் விருப்பமுள்ள தங்களுக்கு உல்லாசப் பயணங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. சகோதரர்களிடம் விரோதம் ஏற்படலாம். குடும்பத்தில் பிரச்னைகள் தலை தூக்கி நின்றாலும் முடிவில் வெற்றி கிடைக்கும். பெரியோர் சொல் கேட்பது நல்லது. பொதுவாக உங்களுக்கு இது ஒரு நல்ல வாரமாகும்.

### மிதுனம்

பரீட்சைக்கு படிப்பது போல் வாழ்க்கைக்கு தயாராவதும் பெரிய வேலைதான். சுபகாரியங்கள் நடக்க வாய்ப்பு உண்டு.உடம்புதான் ஒத்துழைப்பதில்லை. உதவி செய்தாலும் நல்ல பெயர் கிடைப்பதில்லை. குடும்பத்தினராலும் நிம்மதி இல்லை. என்ன செய்வது. மிகவும் கடினமான வாரம் தான் இது.

### கர்க்கடகம்

உங்களிடம் அன்பாக பழகியவர்கள் எல்லோரும் திடீரென்று மாறிவிட்டார்கள். தாய் தந்தையர் உட்பட, பாவம் ஓரிடம்; பழி ஓரிடம், என்ற நிலை. வார்த்தைகளை அளந்து பேசவும். மௌனம் மிகவும் நல்லது. சிலருக்கு அடிவாங்கவும் நேரிடும். மோசமான வாரம் தான் முன்னெச்சரிக்கை அவசியம்.

### சிங்கம்

குடும்பத்தில் சந்தோஷம் மிகும். வம்சவிருத்தி சந்ததி ஏற்பட வாய்ப்பு உண்டு.தூரத்து செய்திகளில் அனுகூலம் கிடைக்கும். விருந்தினர் வருகையால் வேலை அதிக மானாலும் சுகம் ஏற்படும். புதிய முயற்சிகள் வெற்றி தரும். நீங்கள் எதிர்பார்த்த முன்னேற்றமான வாரம் இது.

### கன்னி

கௌரவத்தை எதிர்பார்க்கின்ற உங்களுக்கு சோதனை மிக அதிகம் இந்த வாரத்தில். தந்தையார் உடல் நலம் பாதிக்கப்படலாம். வாரக் கடைசியில் முன்னேற்றம் ஏற்படும். வியாபார விஷயங்களில் அதிக கவனம் தேவை பொதுவாக. கொஞ்சம் மந்தமான வாரமாக இருக்கும்.

### துலாம்

உங்களை பயமுறுத்தி நின்ற பிரச்னைகள் தீரும் நேரம். சிறுசிறு தடங்கல்கள் ஏற்பட்டாலும் காரிய வெற்றி உண்டு. எல்லோரையும் அனுசரித்து நடப்பது நல்லது. வாரக்கடைசியில் சுகபோக வாய்ப்பு உண்டு. சுற்றத்தாரிடம் மதிப்பு ஏற்படும். பொதுவாக நல்ல நிம்மதி தான் உங்களுக்கு இப்போது.

### விருச்சிகம்

ராசி நாதன் நீசமாகி நிற்பதால் பல பிரச்னைகள் கைக்கெட்டியது வாய்க்கெட்டாது. எதிலும் ஏமாற்றம் தான். மனைவியிடம் ஊடல் பெரிதாகக் கூடும். விட்டுக் கொடுத்தால் வினை தீரும். பொறுமை மிக மிக அவசியம். சிறியோருக்கு கூட கைகட்டும் நிலைமை. என்ன செய்வது குழப்பமான காலம் இது.

### தனு

குடும்பத்தில் அமைதி ஏற்படும் காலம். புதிய தொழில் தொடங்கவும் நல்ல தருணம் இது. மனைவி முதல் அனைவரும் தோள் கொடுப்பார்கள். போஜன சயன சுகம் உண்டு. உடல் நலத்தில் கவனம் தேவை. அலைச்சலில் களைப்பு ஏற்படும். நல்ல குதூகலமான வாரம் இது.

### மகரம்

அதிக செலவு ஏற்பட்டாலும் கவலையில்லை. அதற்கேற்ப வருமானம் உண்டு. புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். விவாதங்கள் சூடுபறக்கும். குடும்பத்தில் குழப்பம் ஏற்பட்டாலும் விரைவில் தெளியும். பிரயாணங்களினால் அசதி உண்டு. பொதுவாக இது ஒரு மகிழ்ச்சியான வாரமாகும்.

### கும்பம்

சுப காரியங்களுக்காகவும், மற்றவர்களுக்காகவும் வேலை செய்து சோர்ந்து போவீர்கள்.அலுப்பு மிகும். விடாப்பிடியாக வேலைகளை முடிப்பீர்கள். கடித வழிச் செய்திகளால் மனதிற்கு ஆறுதல் ஏற்படும். வாரக்கடைசியில் எதிர்பாராத அதிர்ஷ்டம் உண்டு. அரசாங்க வழியில் நல்ல செய்தி கிடைக்கும். பொதுவாக உங்களுக்கு அனுகூலமான வாரமிது.

### மீனம்

குழந்தைகளால் கவலையும் குழப்பமும் ஏற்படும். திகைத்து நிற்கக் கூடிய சூழ்நிலை. எதையும் ஆலோசித்து செய்வது நல்லது. வரவுக்கேற்ற செலவு உண்டு. எதிலும் சற்று ஒதுங்கியே இருப்பது நல்லது. விடாமுயற்சி வெற்றிதரும். பொதுவாக இந்த வாரம் சிந்தனைக்குரிய வாரமே.

'சொற்சதுரங்கம்' மாதத்தில் ஒருமுறை வரும் 'தமிழோசை' சிறப்பிதழில் இடம்பெறும்.
வாராந்த இதழ்களில் 'சொல்லாரம்' இடம் பெறும்.

## மாறுபட்ட...........

(4ம் பக்க தொடர்ச்சி)

நல்ல பண்புகளுடனும் நவீன உலகினதும் நாம் முடிவு காண வாய்ப்பில்லாத வளமிக்க பன்னாட்டுக் கலை இலக்கியப் பண்பாட்டு வளங்களுடனும் இணைத்து மேம்படுத்த இயலும்.

நவீனத்துவம் என்பது பழமையின் பூரண நிராகரிப்பல்ல. பழமையின் செழுமைப்படுத்தலும் நவீனத்துவத்தின் ஒருபகுதியே. பழமையினை விடச் செழுமையும் வலிமையும் உள்ள ஒரு புதிய பண்பாடு பற்றிய முன்னோக்கிய பார்வை இல்லாமற் பழமையை ஒழிப்பது பற்றிக் கூப்பாடு போடுவது பயனற்றது.

நமது புலம்பெயர்ந்த சமுதாயத்தின் நோய்களை நாம் அடையாளங்கண்டு நல்ல தீர்வுகளை முன்வைக்கவும் ஆதரிக்கவும் வேண்டிய தேவை நமக்குள்ளது. இதில் இளைய பரம்பரையினரது பங்களிப்பு மிக முக்கியமானது.

நாம் பேண விரும்பும் சுய அடையாளம், நமது பாட்டன் யாருடைய சுய அடையாளமாக இருக்கக் கூடாது. அது நமது சுய அடையாளமாக இருக்க வேண்டும். இவ்வாறு சொல்வதனால் நான் எவ்வகையிலும் என் பாட்டன்மாரின் சுய அடையாளத்தை இழிவு செய்யவில்லை. நிச்சயமாக, அவ்வாறு சொல்வதனால் அதைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றுகிறவர்களை விடப் பன்படங்கு அதைக் கௌரவிக்கிறேன். நமக்குப் பின்வரும் பரம்பரை தனது சுய அடையாளத்தைத் தனது காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப நம்முடையதினின்று வித்தியாசமானதாக அமைக்கும் என்ற எனது எண்ணம் எனது சுய அடையாளம் பற்றிய எனது நம்பிக்கையின் வெளிப்பாடேயொழிய அதன் மறுதலிப்பல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அவ்வப்போது பறித்த அக்கரைப் பூக்கள்

எங்களுக்குக் கவிதைகள் பிடிக்கும். படித்து இரசித்தவற்றைப் பிறருடன் பகிர்ந்து கொள்வதில் விருப்பமுண்டு. மொழியாக்கத்தில் நிறைய ஆர்வமுண்டு. நாங்கள் தனித்தனினயாகவோ அல்லது கூட்டாகவோ பல மொழியாக்கங்களைச் செய்துள்ளோம். இரண்டு தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளோம் ('அன்னா அக்மதோவா கவிதைகள்', மண்ணும் சொல்லும்: மூன்றாம் உலகக் கவிதைகள்) இவ்விரண்டு தொகுப்பிலுமுள்ள கவிதைகள் நாங்கள் திட்டமிட்டு மொழியாக்கம் செய்தவை...

பின்னர் வேறு காத்திரமான படிப்பிலும் எழுத்துப்பணியிலும் ஈடுபட்டு எங்கள் மூளைத் திசுக்கள் களைப்படையும் போது, அவற்றுக்குப் புத்துணர்ச்சியூட்டுவதற்காக கவிதையின் பால் எங்கள் கவனத்தைத் திருப்புவதுண்டு. சில கவிதைகளைப் படித்தவுடனேயே அவற்றைத் தமிழாக்கம் செய்யக் கைகள் பரபரக்கும். எங்கோ ஒரு மூலையில், நல்ல கவிதைகளின் வரவுக்காகக் காத்திருக்கும் ஒரு வாசகனை, வாசகியைக் கருத்தில் கொண்டு மொழியாக்கம் செய்யத் தொடங்குவோம். இது மனத்திற்கு நிறைவு தரும், பெருமைதரும், உவகையூட்டும் ஒரு படைப்புச் செயலைதான். மொழியாக்கத்தின் வழி எங்கள் அக உலகங்கள் விரிவடைந்திருக்கின்றன. எங்கள் மொழி அறிவு வளர்ந்திருக்கிறது. எங்கள் வாழ்க்கை புதிய பரிமாணங்களைப் பெற்றிருக்கிறது...

எந்தவொரு மிகச் சிறந்த மொழியாக்கத்திலும் கூட மூலப்படைப்பின் 'ஆன்மா' அப்படியே தக்க வைத்துக் கொள்ளப்படுவதில்லை. தக்க வைத்துக் கொள்ளவும் முடியாது. மொழியாக்கத்தின்போது மூலப்படைப்பிற்கு 'சேதாரங்கள்' ஏற்பட்டு விடுகின்றன. சில விஷயங்கள் இழக்கப்பட்டு விடுகின்றன. இது ஒன்றுக்கொன்று முற்றிலும் வேறுபட்ட பண்பாட்டு வேர்களைக் கொண்ட மொழிகளுக்கு மட்டுமன்றி, ஒத்த பண்பாட்டு வேர்களைக் கொண்ட மொழிகளுக்கும் பொருந்தும் உண்மை. 'மொழியாக்கம் என்பது ஒரு துரோகச் செயல்'- ஆம். இக்கருத்துகள் யாவும் எங்களுக்கும் பழக்கமானவைதான்.

ஆயினும் தொடர்ந்து நாங்கள் மொழியாக்கத்தில் ஈடுபடுவது ஏன்? மொழியாக்கத்தால் ஏற்படுவது சேதாரங்களும் இழப்புகளும் மட்டுமல்ல; சில ஆதாயங்களும்தான். முற்றிலும் வேறுபட்ட பண்பாட்டு வேர்களை இணைப்பதைப் பெரிதும் சார்ந்துள்ளது உலகப்பண்பாடு. இவ்விணைப்புக்கான முக்கிய பாலமாக மொழியாக்கம். இவ்விணைப்புப் பாலமில்லாமல் போய் விட்டால் நாம் நமது கிடுகுவேலிகளுக்குள், கிணற்றுத் தவளையாக, கூட்டுப் புழுவாக நிலைத்து விடுவோம்.

'தமிழோசை' வாசகர்களுக்கு நாங்கள் தர விரும்புபவை, முன்கூட்டியே திட்டமிட்டு மொழியாக்கம் செய்தவையல்ல. மாறாக பல்வேறு எழுத்துப் பணிகளுக்கிடையே அவ்வப்போது நாங்கள் பறித்த அக்கரைப் பூக்கள்தாம். அவற்றில் நிச்சயமாக மணமுண்டு. முகர்ந்து பாருங்கள்.

எஸ்.வி.ராஜதுரை
வ.கீதா

**பாஹினயாய் செளதரி** (*Bahinabai Choudhari*:1880-1951) இந்தியாவின் மராட்டிய மாநிலத்திலுள்ள காந்தேஸிவராடி என்ற மாவட்டத்தில் எளிய குடியானவர் குடும்பத்தில் பிறந்தவர். எழுதப் படிக்கத் தெரியாத அவர் வட்டார வழக்கிலேயே பாடல்கள் பலவற்றைப் புனைந்தார். அப்பாடல்கள் அவரது மகனால் திரட்டப்பட்டு பி.கே.ஆத்ரே என்ற புகழ்பெற்ற மராத்திய இலக்கிய விமர்சகரின் துணையுடன் வெளியிடப்பட்டன. இக்கவிதையை (பாடலை) ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் விலாஸ் ஸரங்.

# இப்போது எனக்காக நான் இருக்கிறேன்

## பாஹினபாய் செளதரி



கண்களிலிருந்து வழியும் கண்ணீருக்கு
முடிவே இல்லை
நான் அப்படி அழுதிருக்கிறேன்
இப்போது கண்ணீர் வற்றி விட்டது;
விம்மல்கள் மட்டுமே எஞ்சியுள்ளன.

கண்ணீர் வற்றிவிட்டது,
எனக்குச் சிறிது ஓய்வளிக்க.
கண்ணீர் உருக்காமல் அழாதே
என் மனமே.

ஓ பூமித்தாயே, எனக்குச் சொல்
இதெல்லாம் எப்படி நடந்தது?
தனது நிழலை மட்டும் விட்டுவிட்டு
மரம் எவ்வாறு மறைந்து போனது?

கடவுள்கள் சென்று விட்டனர்
தமது தேவலோக இல்லத்திற்கு;
இரண்டு தங்கக் குட்டிகள் சிரிக்கின்றன
உன் கண்களுக்கு முன்.
அழாதே, ஓ மனமே.

அழாதே, ஓ மனமே,
அழுவது உனக்கு இயல்பாகிவிட்டது.

உனது கண்ணீரை சிறிது சிரிக்கச் செய்!
அது தான் இப்பூமியில் நடக்கும் வாழ்விற்கு
சிறிது சுவையூட்டுகிறது.

எனது நெற்றியிலிருந்த குங்குமம்
துடைத் தெறியப்படுகிறது;
பச்சை குத்திய கோடுமட்டும்
எஞ்சி நிற்கிறது விதியை வரவேற்க.

வளையல்கள் உடைக்கப்படுகின்றன.
ஆயினும் மணிக்கட்டுகளால்
இன்னமும் விதியுடன் போராட முடியும்.
மங்கலநாள் எனது கழுத்தை இனியும் அலங்கரிப்பதில்லை
ஆனால் கழுத்தில் கைவைத்துச் செய்து கொண்ட
சத்தியங்களோ
இன்னும் தாக்குப் பிடித்து நிற்கின்றன.

வேண்டாம், எனது இனிய பெண்களே
எனக்காக அழ வேண்டாம்
இப்போது நான் அமைதியில்;
இனி எல்லாமே எனக்கும்
என் இதயத்திற்கும் இடையில் தான்.

# ஈற்றடி நிறைவுப் போட்டி

'தமிழோசை', 9.10.92 இதழில் வெளியான 'எழுதி எழுதி' என்ற கவிதையின் ஈற்றடியை நிறைவு செய்யும்படி 23.10.92 இதழில் கேட்டிருந்தோம். மூலக் கவிதை ஈற்றடியைக் கீழே தருகிறோம்.

"காகித்தின் இருபக்கங்களிலும்
கரிய குறிகளைப் போட்டு
காகிதத்தை வீணாக்கும் அப்பாவின்
செயலைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய் அம்மா?"

பதிலனுப்பிய வாசகர்களில் மிகச்சிறந்ததாக தெரிவுசெய்யப்பட்ட ஈற்றடி:

காகிதத்தின் இருபக்கங்களிலும்
கரிய குறிகளைப் போட்டு
காகிதத்தை வீணாக்கும் அப்பாவின்
விழுது நான் அம்மா- அப்பாவழி
தொழுது என்னைத் தொடரவிடு.

எழுதியவர்:-
**-வல்லிபுரம் குலேந்திரன்**
25, Woodlands Way
Mitcham.
Surrey CR4 2DZ.

# புகைப்படக் கலைஞர்

(9ம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தை ஒரு நிழலைப்போல் இருக்கிறது'. அவளுக்கு என்று எந்தத் தேசமும் இல்லை. தான் எங்கிருக்கிறோம் என்று கூட அந்தப் பெண்ணுக்குத் தெரியவில்லை. எவ்வளவு நம்பமுடியாத விஷயங்கள். ஒரு குழந்தைக்கு சுதந்திரமான வாழ்க்கை எங்காவது அமைய வேண்டும்' என்ற ஒரே காரணத்துக்காக எப்படி இந்த ஜனங்கள் எல்லாவற்றுக்கும் துணிந்து விட்டிருக்கிறார்கள். அவளுடைய கணவன் இந்தப் பெண்ணைப்படகில் ஏற்றி விடுவதற்காக அவன் வாழ்நாள் முழுவதும் சேமித்ததையெல்லாம் பயன்படுத்தியிருக்கிறான். ஆனால் அவன் தங்கிவிட்டான். தாங்கள் மறுபடியும் சந்திப்போமா என்பது கூட அவர்களுக்குத் தெரியாது. எல்லாம் அந்த ஒரு குழந்தைக்காக. இவற்றை என்னால் சரியாக வெளிப்படுத்தக்கூட முடியாது.

கே: ஆனால் நீங்கள் வெளிப்படுத்திக் கொண்டு தான் இருக்கிறீர்கள்- மிகவும் அழகாக. ஒரு படம் எப்படி அந்தக் குறிப்பிட்ட உணர்வை, குறிப்பிட்ட புரிதலை வெளிப்படுத்த முடியும்?

ப: ஒரு படம் நுண் உணர்வு பூர்வமாக இருந்தால் ஒருவேளை ஒரு குறிப்பிட்ட கணத்தைப் பதிவு செய்யலாம். ஆனால் அது அந்தக் கணத்திற்கே உரித்தான செய்தியை வெளிப்படுத்தாமல் போகலாம். 'நான் பரபரப்பான படங்களுக்காக முனைவதில்லை. செய்தியைத் தெரிவிக்கும் படம் தான் எனக்கு முக்கியம்.' அதிக வார்த்தைகளே தேவைப்படாத, ஆனால் குறிப்பிட்ட கணங்களை வெளிப்படுத்தும் புகைப்படங்கள் உண்டு. சில வேளைகளில் அவை ஏமாற்றம் அளிக்கும்- நீங்கள் கேமராவை இயக்கும்போது அந்தக் கணத்தைப் பற்றிவிட்டதாக நினைக்கலாம். ஆனால் வீடு திரும்பியதும் அது வேறொன்றாக இருக்கும்.

கே: படங்களுக்கு வார்த்தைகள் தேவை என்று நினைக்கிறீர்களா? அதாவது அவை ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன என்று கருதுகிறீர்களா?

ப: நிச்சயமாக, அது ஒரு நிலக்காட்சியாக இருந்தாலொழிய; அல்லது அதனுடைய அழகை அதற்காகவென்றே பாராட்ட முடியும் என்று இருந்தால் ஒழிய. உலகம் விதவிதமாக இருக்கிறது. அதனால் படங்கள் தனித்துவிடப்பட்டால் தவறாகப் புரிந்து கொள்ளப்படலாம். அதனால்தான் வார்த்தைகளையும் புகைப்படங்களையும் நான் சேர்த்தே பார்க்கிறேன். ஐ.நா. படங்கள் அனைத்திலும் தலைப்புகளும் ஓரிரு விளக்கவரிகளும் உண்டு.

கே: நீங்கள் ஐ.நா.வில் புகைப்படக்காரராகவும் புகைப்பட ஆசிரியராகவும் இருக்கிறீர்கள் அல்லவா?

ப: இப்போது வேலையில் 50% சதவீதம் புகைப்படத் தேர்வு என்றும் மற்ற 50% சதவீதம் களத்திற்குச் சென்று புகைப்படம் எடுப்பது என்றும் இருக்கிறது.

கே: உங்களுக்காக வேலை செய்யும் புகைப்படக்காரர்கள் உலகமெங்கும் இருக்கிறார்களா?

ப: ஆமாம். இங்கிருந்து கொண்டே வேலைகளைத் தரமுடியும். இளைய புகைப்படக் கலைஞர்கள் அல்லது இந்த மாதிரி வேலையில் ஆர்வமுள்ளவர்கள் ஒன்று தெரிந்து கொள்ள வேண்டும். இதில் நிறையப் பணம் கிடைக்காது. ஆனால் வளரும் நாடுகளில் மூன்று நான்கு குறிப்பிட்ட கருப்பொருள் சார்ந்த புகைப்படத் தொகுப்புகளை ஒரு புகைப்படக்காரர் உருவாக்க முடிந்தால் அவர் எங்களுக்காக வேலை செய்ய முடியும். நாங்கள் நிறையப் பணம் கொடுப்பதில்லை. ஆனால் உலகத்தில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றி அக்கறை கொண்ட புகைப்படக்காரர்கள் எங்களுக்குத் தேவைப்படுகிறார்கள். ஒருவர் தனக்கென்று ஒரு சில விஷயங்களை வளர்த்துக் கொண்டால் உலகத்தில் நடப்பது குறித்துத் தெரிந்து கொள்ள நிறைய வாய்ப்புகள் கிட்டும்.

## கடற்படைகள் தாக்குதல்

யாழ்- நாவாந்துறை கடல் பிரதேசத்தில், வியாழன் அதிகாலை 1.15மணியளவில் 4 படகுகளில் சென்ற விடுதலைப்புலிகள் மீது இலங்கை கடற்படைகள் தாக்குதல் நடாத்தியுள்ளன. இதன் போது மூண்ட மோதலில் வி.பு.கள் பின்வாங்கிச் சென்றதாக அரசு கூறியுள்ளது.

# அம்மா

(7ம் பக்கத் தொடர்ச்சி)

ணரால் எதுவும் செய்ய முடியவில்லை. ஒருவருக்கும் தெரியாமல் இருவரும் தங்கள் மனங்களை குழிதோண்டிப் புதைத்துவிட்டு மௌனமாகிப் போனார்களாம்.

இந்தப் பரிதாபத்துக்குரிய அம்மாவிற்கு பதினைந்து வயதான தன்னால் என்ன செய்ய முடியும் என்ற சிந்தனைகள் ரகுநந்தனைத் தாக்கத் தொடங்கின.

"குஞ்சு நேரம் போச்சுடா... கொல்லப் போறார்... சுறுக்காவா" என்றபடி நடக்கும் அம்மாவின் பயம் தொற்றிக்கொள்ளும்.

வயல்வெளியின் முடிவில் வரிசையாய் நிற்கும் பனைகளின் பின்னால் விழுந்து கொண்டிருக்கும் சிவப்புச் சூரியனை ரகுநந்தன் பிடித்திழுத்து நிறுத்த நினைப்பான்.

இருண்ட கோட்டையின் கதவுகளைத் திறந்து அம்மாவும் அவனும் பயந்து பயந்து நுழைகையில் "ஏனடி இவ்வளவு நேரம்.. எவனோட கிடந்திற்று வாறாய்"- போதையில் தள்ளாடும் ஒற்றைக் கொம்பு இராட்சதனின் உறுமல் கோட்டைச் சுவர்களில் பட்டு எதிரொலிக்கும்.

****

சலவை யந்திரத்திலிருந்து எடுத்த துணிகளைக் காயப்போட அவகாசம் இல்லை. நேரம் ஐந்தைத் தாண்டியிருந்தது. இப்போது புறப்பட்டால் தான் ஆறுமணிக்கு சிசிலியா வீட்டில் நிற்கலாம்.

ஒரு நாள் ரகுநந்தன் வீடு திரும்பியபோது அம்மாவின் தலையில் ஒரு பெரிய கட்டிருந்தது. தம்பிகளின் தங்கச்சியின் முகங்களில் ஒருவித கலவரம் தெரிந்தது.

என்ன நடந்தது என்று கேட்டபோது தங்கச்சிதான் பதில் சொல்ல முன்வந்தாள்.

"ஐயா சாடையாகத் தள்ளி விட்டிருக்கிறார்.. சிவர் விளிம்பில தல அடிபட்டுட்டுது"

ரகுநந்தன், தன்னால் இப்படி ஆத்திரப்பட முடியுமா என்று பின்னர் பல தடவைகள் நினைத்து நினைத்து ஆச்சரியப்பட்டிருக்கிறான். மற்றவர்களால் தொடுவது கூடத் தடை செய்யப்பட்டு பளபளவென்று மினுங்கிய தனது றலி சைக்கிள் விறகு கொத்தும் கோடரியால் சின்னாபின்னப்படுத்தப்படுவதை தடுக்கத் திராணியற்று அதிர்ச்சியுடன் ஐயா பார்த்துக் கொண்டிருந்தார்.

"இந்த மனிசன்ர சம்பளம் வேணாம் அம்மா.. இந்தாள வீட்டை விட்டுப் போகச்சொல்லு.. நான் படிக்கிறத விட்டுட்டு ஏதாவது வேல தேடுறன்"

ரகுநந்தன் அழுதபடி சொன்னான்.

அம்மா திடுக்கிட்டுப் போனா.

"டேய் என்ன விசர்க்கதை கதைக்கிறாய் நீ... குமராப் போய் நிக்கிற உன்ர தங்கச்சிய மறந்திற்றா பேசுற... பிள்ளயள் வளர்ந்தவுடன புருசனத் திரத்திப் போட்டாள் எண்டு இந்த ஊர் திண்டு துப்புமடா.. விசர்க்கதை கதையாம உன்ர படிப்பலுவல்களைப் போய்ப்பார்" பதைத்தபடி அவனை அம்மா விரட்டினா.

சைக்கிள் துவம்சத்தின் பின்னர் ரகுநந்தன் நாட்டில் இருக்கும் வரை ஐயா அம்மாவுக்கு கை நீட்டும் பழக்கத்தை தற்காலிகமாக மறந்து போனார்.

*****

நாளைக்கு அதிகாலையில் வேலைக்குப் போகவேண்டும். அதனால் உணவுக்குப்பின் தொடங்கிய 'அக்குவாவிற்றா' நுகர்வில் பங்குகொள்ளாமல் சிசிலியாவிடமிருந்து விடைபெற்றான்.

தெருவிளக்குகள் பனிப்புகாருள் புதைந்தபடி மினுமினுக்க, வீதியெங்கும் இரவு அமைதியாய் விரிந்து கிடந்தது. ரக்ஸி ஸ்ரான்டில் காத்திருந்த இரண்டுபேரைத் தவிர மனித நடமாட்டம் எதுவும் இல்லை. மெல்ல மெல்ல ஈரத்தென்றல் தன்னைச் சூழுவதை உணர்ந்த ரகுநந்தன் கால்களை உற்சாகப்படுத்தினான். நேரம் இரவு ஒன்றரை மணியாகியிருந்தது. இந்நேரம் ஊரில் ஐந்தரை ஆறு மணியாகியிருக்கும். வீட்டின்மீது குண்டு விழாமலிருந்தால் ஐயா நித்திரையாயிருப்பார். அம்மா ஐயாவுக்கு முட்டைக் கோப்பி போடுவதற்கு எழும்பியிருப்பா. நன்றி:சுவடுகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழோசை

## சசிதரன் கொலை:
# குற்றவாளிகள் விடுதலை

(லண்டன் நிருபர்)
வெள்ளை இன இளைஞர்களால் கொலையுண்ட தமிழ் இளைஞர் சசிதரன் கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட இரு நபர்களும் தற்போது விடுதலையாகியுள்ளனர். பத்துக்கும் மேற்பட்டோர் இத்தாக்குதலில் பங்குபற்றிய போதும் கறி ஹொஸ்கின்ஸ், அன்ட்ரு நோபிள் ஆகிய இருவர் மட்டுமே இக் கொலைக்காக குற்றஞ்சாட்டப்பட்டனர். கடந்த ஏப்ரல் 2ஆம் தேதி மாஜீஸ்ரேட் கோட்டில் அன்ட்ருவும் இவ்வாரம் ஓல்ட் பெய்லியிலுள்ள உயர் நீதிமன்றத்தில் ஹொஸ்கின்ஸும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். போதிய சாட்சியங்கள் இல்லாமையே இவர்கள் விடுதலைக்கு காரணம் எனக் கூறப்பட்டுள்ளது.



இது குறித்து 'சசிதரன் ஞாபகார்த்தக்குழு' கருத்துத் தெரிவிக்கையில், பொலீசார் தேவையான சாட்சிகளைத் தேடுவதற்கு போதியளவு முயற்சி எடுக்கவில்லை என்றும், முடிக்குரிய வழக்கறிஞர் சபை (Corown Prosecution Services) இவ்வழக்கை சரியாக கையாளவில்லை எனவும் குற்றம் சாட்டுகிறது. மேலும், சாட்சிகளுக்கு போதிய பாதுகாப்பு அளிக்க பொலீசார் தவறியமையினாலேயே பலர் சாட்சி யளிக்க முன்வரவில்லை என்றும் மேற்படி குழுவின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

சசிதரன் கொலை சம்பந்தமாகவும், சகல இனவெறிக் கொலைகளைக் கண்டிக்கும் முகமாகவும் கடந்த மார்ச் மாதம் ஈஸ்ட் காமில் ஒழுங்கு செய்யப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் போது 4000க்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்ட போதும் மிகக் குறைந்த அளவு தமிழர்களையே காணக்கூடியதாக இருந்தது.

## சிறீலங்கா இராணுவத்திற்கு
# மேலும் தமிழ் இளைஞர்கள்

(கொழும்பு.நவ.10)
இராணுவத்திற்கு, மேலும் புதிய தமிழ் இளைஞர்களை சேர்த்துக் கொள்ள சிறீலங்கா அரசு திட்டமிடுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தை உக்கிரப் படுத்துவதற்கு, சிறீலங்கா அரசு எதிர்நோக்கும் பாரிய பிரச்னை 'ஆள் பற்றாக்குறை' ஆகும். சிறீலங்கா இராணுவத்துடன் இணைந்து செயலாற்றும் தமிழ்த் தீவிரவாதக் குழுக்களை, கூடியளவு விரைவில் 'ஆட்சேர்ப்பு' செய்யுமாறு; இராணுவ உயர் அதிகாரிகள் கேட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

### காளிதாஸ் படை

இதைவிட, வெவ்வேறு தமிழ்க் குழுக்களிலிருந்து வெளியேறிய தமிழ் இளைஞர்கள் பலர் இராணுவத்தில் சேர்க்கப்பட்டு, போர்ப் பயிற்சி பெற்று வருகிறார்கள். அத்துடன் ஒரு புதிய படைப்பிரிவொன்று 'காளிதாஸ்' என்பவரால் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது. இவர், ஈ.என்.டி.எல்.எவ் பாராளுமன்ற உறுப்பினர் கே.சிறீநிவாசனின் மெய்க்காப்பாளராக யாழ் மாவட்டத்திலுள்ள வவுனியா காட்டுப்பிரதேசத்தில் பணியாற்றியவர். மிக அண்மைக்காலம் வரை இந்தியாவில் வசித்த இவர், 'சிராவஸ்தி'யிலுள்ள சிறிநிவாசனின் இருப்பிடத்தில் பெருந்தொகையான பணத்தை கொள்ளையிட்டு சென்றார்' என சிறிநிவாசனால் குற்றம் சாட்டப்பட்டவர். இந்த 'காளிதாஸ்' தற்போது இந்தியாவிலிருந்து தனிப்பட்ட உத்தரவாதத்தின் பேரில் கொழும்பிற்கு வரவழைக்கப்பட்டுள்ளார்.

தற்போது ரெலோ, புளொட், ஈ.பி.டி.பி உறுப்பினர்கள், சிறீலங்கா இராணுவத்துடன் இணைந்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன், யுத்தம் புரிவது தெரிந்ததே.

### தமிழர் உயிரிழப்பு

இவ்யுத்தத்தில் ரெலோ 30 பேரையும், புளொட் 17 போரையும், ஈ.பி.டி.பி. ஒரு கணிசமான தொகையினரையும் பறிகொடுத்துள்ளனர். இதைவிட ரெலோவின் 60 பேரும், புளொட்டில் 10பேரும் காயமடைந்துள்ளனர். இக்குழுக்கள் 1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அரசுடன் செய்த ஒரு அரசியல் இணக்கத்தின் பேரிலேயே, இவ்வாறு இணைந்து செயற்படுகிறார்கள்.

## அனுமதி மறுக்கப்பட்ட தமிழ் அகதிகள்:
# சுவிஸ் மறுப்பு-பிரிட்டன் மீள்பரிசீலனை

(லண்டன்)
கடந்த 18ம் தேதி அன்று லண்டன் வந்தடைந்த இலங்கையைச் சேர்ந்த தமிழ் அகதிகள் இருவருடைய அகதி அந்தஸ்து கோரும் விண்ணப்பத்தை பரிசீலனை செய்ய பிரித்தானிய உள்நாட்டு அலுவலகம் மறுத்து அவர்களை, சுவிஸ்சலாந்து (Zurich)க்கு அனுப்ப முடிவு செய்தது. ஏனெனில் இலங்கையிலிருந்து பயணத்தை ஆரம்பித்து Zurich ஊடாக வந்தமை குறிப்பிடத்தக்கது. 27.10.1992 அவர்களது மறு உயர் நீதிமன்றத்தினாலும் நிராகரிக்கப்பட்டது. 27.10.92தமிழ் நலன்புரிச்சங்கம் (நியூகாம்) U.K சுவிற்சலாந்து அரசுடன் தொடர்பு கொண்டபோது, அவ்வகதிகள் சுவிற்சலாந்துக்கு அனுப்பப்படும் பட்சத்தில் அவர்கள் மீண்டும் லண்டனுக்கு அனுப்பப்படுவார்கள் என சுவிற்சலாந்து அரசு, அதன் லண்டன் தூதரகம் ஊடாக கடித மூலம் உறுதி செய்தது. இக் கடிதத்தையும் பொருட்படுத்தாது, இவ்வகதிகளை பிரித்தானியா அரசு 28.10.92 அன்று சுவிற்சலாந்துக்கு திருப்பி அனுப்பியது. ஆனால் 29.19.92 அன்று இவ்விரு அகதிகளும் சுவிஸ்அரசினால் மீண்டும் லண்டனுக்கு திருப்பியனுப்பப்பட்டனர். தற்போது இவர்கள் விண்ணப்பத்தை பரிசீலனை செய்ய பிரித்தானிய அரசு ஒத்துக் கொண்டுள்ளது.

